வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 10.05.2022 செவ்வாய்க்கிழமை இதழ் : 155 பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை




## ராஜபக்ஷக்களின் பரம்பரை வீடு அம்பாந்தோட்டையில் தீக்கிரை!

### டி. ஏ. ராஜபக்ஷவின் சிலை உடைப்பு

கொழும்பு, மே 10

ராஜபக்ஷக்களுக்கு சொந்தமான பரம்பரை வீடும் நேற்றிரவு அடித்து நொறுக்கப்பட்டதுடன், தீயிட்டு எரிக்கப்பட்டது.

அம்பாந்தோட்டை - வீரகெட் டிய - மெதமுலனையிலுள்ள வீடே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டது. ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களே இந்த வீட்டை தீயிட்டு எரித்தனர் என்று கூறப்படுகின்றது.

முன்னதாக மெதமுலன 15



# பற்றியெரிகிறது தென்னிலங்கை!

- ★ இரவிரவாக வன்முறைகள் பரவல்
- ★ வன்முறைகளில் மூவர் உயிரிழப்பு
- ★ ஆளும் தரப்பினரை தேடி வேட்டை
- ★ அலரி மாளிகை முன் பதற்றநிலை



கொழும்பு, மே 10

**காலிமுகத்திடலில் நேற்று பகல் தொடங்கிய வன்முறையை தொடர்ந்து தென்னிலங்கை முழுவதும் கலவரங்கள் வெடித்துள்ளன. அரச தரப்புமீதான தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமாக போராட்டக்காரர்கள் ஆளும் தரப்பினரின் வீடுகள், அலுவலகங்களை தீயிட்டு எரித்துள்ளனர்.**

வன்முறையைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் விதிக்கப்பட்ட நிலையில், அதனை மீறி இரவிரவாக போராட்டக்காரர்கள் கலவரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதிகளவான பொலிஸார், இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டபோதும் வன்முறைகளை தடுக்க முடியவில்லை என்று தென்னிலங்கையிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேசமயம், ஆளும் தரப்பை சேர்ந்தவர்களின் 15

## அரச ஆதரவாளர்கள் வன்முறை; 'கோட்டா கோ கம' தரைமட்டம்

கொழும்பு, மே 10

அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து காலிமுகத்திடலில் நடைபெறும் போராட்டத்தை கலைக்க அலரி மாளிகை முன்பாகக் கூடிய அரச ஆதரவாளர்கள் என்று நம்பப்படும் கும்பல் தாக்குதல்களை நடத்தியது. அந்தக் கும்பல் போராட்டப் பந்தல்கள், நூலகம் என்பவற்றை அடித்து நொறுக்கி தீக்கிரையாக்கியது. 15

## நாடு முழுவதும் ஊரடங்கு; நாளை காலை வரை அமுல்!

கொழும்பு, மே 10

வன்முறையை தடுக்க நாடு முழுவதும் விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு நாளை புதன்கிழமை காலை 7 மணி வரை நீடிக்கும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. நேற்று காலிமுகத்திடல் போராட்டகளத்தில் வன்முறை பரவியது. இந்த வன்முறையை கட்டுப்படுத்த நாடு முழுவ தும் ஊரடங்கு அமுல் 15

## குமார வெல்கம தாக்கப்பட்டார்

கொழும்பு, மே 10

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான குமார வெல்கம எம். பி. போராட்டக்காரர்களால் தாக்கப்பட்டார்.

கொழும்பு - பன்னிப்பிட்டி - கொட்டாவை பகுதியில் வைத்து அவர் பயணித்த வாகனம் மறிக் கப்பட்டது. இதன்போது அவர் 15



## பிரதமர் பதவியை துறந்தார் மஹிந்த!

### வன்முறை சம்பவத்தை அடுத்து முடிவு

கொழும்பு, மே. 10

மஹிந்த ராஜபக்ஷ தான் வகித்த பிரதமர் பதவியை நேற்று இராஜினாமா செய்தார். இது தொடர்பான "பதவி துறப்பு" கடிதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பிரதமரின் ஊடகப் பிரிவும் இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் 15

## அமைச்சர்கள், எம்.பிக்கள் பலரின் வீடுகள் தீக்கிரை!

கொழும்பு, மே. 10

அமைச்சர்கள் உட்பட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலரின் வீடுகள் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. ஒரு சிலரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர்களான ரமேஷ் பத்திரண, ரோஹித அபேகுணவர்த்தன, பந்துல குணவர்த்தன, சன்ன ஜயசுமண, கோகிலா குணவர்த்தன, பவித்ரா வன்னியாராச்சி, பிரசன்ன ரணதுங்க, காமினி லொக்குகே, சனத் நிஷாந்த, 15



## மோதலில் ஈடுபட்ட அனைவரையும் கட்சி வேறுபாடின்றி கைது செய்க!



கொழும்பு, மே.10

கொழும்பு காலி முகத்திடலிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இடம்பெற்ற மோதல்கள் குறித்து தாம் முழுமையாக அறிந்திருப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ருவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மோதலில் 15

## ஆர்ப்பாட்டக்காரர்களிடம் சிக்கிய ஆளும் கட்சி எம். பி. தற்கொலை!

### மெய்ப்பாதுகாவலரும் சடலமாக மீட்பு



கொழும்பு, மே 10

ஆர்ப்பாட்டக்காரர்களால் சுற்றிவளைக்கப்பட்ட ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டார்.

அமரகீர்த்தி அத்துக்கோரள என்ற பாராளுமன்ற 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# யாழ்.போதனா வைத்தியசாலையில் சகல சேவைகளுமே இடைநிறுத்தம்!

## அத்தியாவசிய சேவைகள் மட்டும் நடைபெறும்

யாழ்ப்பாணம், மே10

**யாழ். போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்து சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.**



யாழ்.போதனா வைத்தியசாலையின் தற் போதைய நிலை தொடர் பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ் போதனா வைத்தியசாலையை பொறுத்தவரை நோயாளர்களின் சிகிச்சைக்குரிய மருந்து மற்றும் சத்திர சிகிச்சைக்கு தேவையான உபகரணங்களுக்கான மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அத்தியாவசியமாக தேவையான சத்திர சிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றன. ஏனைய சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் விசர்நாய் கடிக்கான மருந்து தட்டுப்பாடாக இருக்கிறது. எனவே பொதுமக்கள் கவனமாக மிருகங்களிடம் கடிபடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஏனெனில் விசர் நாய்க்கடி மருந்து என்பது ஒரு விலை உயர்ந்த மருந்து தாகும். அதற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் மிக கவனமாக இருக்கவேண்டும். அத்துடன் விபத்துக்கள் மற்றும் தேவையற்ற பிரச்னைகள் மூலம் வைத்தியசாலைக்கு வருவதை தவிர்க்குமாறும் கோருகின்றோம்.

போதுமான அளவு சேவையை வழங்க முடியாதுள்ளது என்பதை மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். சுகாதார கட்டமைப்புகள் சீர்குலைந்துள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்-என்றார். (அ-03)

---

# அரசியல்வாதிகளின் வீடுகள்மீது தாக்குதல்!



கொழும்பு, மே 10

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் வீடுகள்மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதுடன், தீவைப்பு சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இந்திக அனுருத்த, நிமல் லன்சா எம்.பிக்களின் வீடுகள் தாக்கப்பட்டதுடன், தீ வைத்து எரிக்கப்பட்டன.

நேற்றையதினம் கோட்டா கோ கம“ மற்றும் “மைனா கோ கம” என்பவற்றின் மீது மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்க என்று அறியப்பட்டோர் தாக்குதல்களை நடத்தினர். இதைத் தொடர்ந்து பரவிய கலவரத்திலேயே ஆளும் கட்சியை சேர்ந்த பலரின் வீடுகள் தாக்கப்பட்டன என்று அறிய வருகின்றது. (ஐ)

---

# பிரதமர் மஹிந்த பதவி விலகல் பால்சோறு கொடுத்த மக்கள்!

கொழும்பு, மே 10

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியமையைத் தொடர்ந்து தென்னிலங்கையில் மக்கள் பால்சோறு கொடுத்து கொண்டாடி வருகின்றனர்.

ஜனாதிபதி அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த ஒரு மாத காலமாக காலிமுகத்திடலில் பிரதான போராட்டம் நடைபெற்றது. இதற்கு ஆதரவாக நாடு முழுவதும் போராட்டங்கள் இடம்பெற்று வந்தன.

இந்நிலையில், நேற்றைய தினம் காலிமுகத்திடல் போராட்டக்களம் அரச ஆதரவாளர்களால் வன்முறைக்களமானது. இந்நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது பதவியை ராஜிநாமா செய்தாரென நேற்று மாலை பிரதமர் அலுவலகம் அறிவித்தது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, நேற்று கொழும்பிலும் தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் மக்கள் பால்சோறு சமைத்து வழங்கினர். (ஐ)



கொழும்பு பஞ்சிகாவத்தையில் பால்சோறு சமைக்கும் மக்கள்

---

# ஜனாதிபதி, அரசு, படைத்தரப்பு பொறுப்பு கூறியே ஆகவேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, மே 10

நாட்டில் அவசரகால சட்டம் நடைமுறையிலுள்ள வேளையில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது நிகழ்த்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களைக் கடுமையாகக் கண்டனம் செய்வதாகத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, இதற்கு ஜனாதிபதி, பிரதமர் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த அரசாங்கமும் பொலிஸார் உள்ளடங்கலாக பாதுகாப்புத் தரப்பும் பொறுப்புக்கூறவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக நேற்று திங்கட்கிழமை அலரி மாளிகையில் ஒன்றுதிரண்டவர்கள், அலரி மாளிகைக்கு முன்பாக காலி வீதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த “மைனா கோ கம” கூடாரங்களை இடித்து, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களையும் கடுமையாகத் தாக்கினர்.

இந்தத் தாக்குதலுக்கே அவர் கண்டம் வெளியிட்டுள்ளார்.

அரசியல் தீவிரவாதக் குழுவொன்று அலரி மாளிகைக்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்த “மைனா கோ கம” மற்றும் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்த “கோட்டா கோ கம” ஆகிய இரண்டையும் முழுமையாக சீர்குலைத்து நிர்மூலம் செய்திருக்கின்றது. இந்த அரசியல் தீவிரவாதத்தை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். நாட்டில் ஜனநாயகத்திற்கும், பொதுமக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் ஏதுவான இடமிருக்கவேண்டும். அரசாங்கத்திற்குள் இருவேறு நிலைப்பாடுகள் இருப்பதாக வெளியே காண்பித்



துக்கொண்டு, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் மக்கள்மீது தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்துகின்றார்கள். இது மிகமோசமான, மிலேச்சத்தனமான தாக்குதல் நடவடிக்கை என்பதுடன் இதற்கு பொலிஸாரே பொறுப்புக்கூறவேண்டும்.

அவசரகாலச்சட்டம் நடைமுறையிலுள்ள வேளையில், இத்தகைய மிலேச்சத்தனமான தாக்குதல்கள் இடம்பெறுவதற்கு பொலிஸார் அனுமதித்தது ஏன்? அவர்கள் வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது ஏன்? இதற்கு ஆணையிட்டது யார்? ஆகவே பொலிஸார் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த பாதுகாப்புப் பிரிவும் இதற்குப் பொறுப்புக்கூறவேண்டியது அவசியமாகும்.

மேலும் இந்த சட்டவிரோத நடவடிக்கையை நாம் கடுமையாகக் கண்டனம் செய்யும் அதேவேளை, இதனுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் சட்டத்தின் முன்நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

அதுமாத்திரமன்றி இத்தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் நாம் ஒன்றைக்கூறவிரும்புகின்றோம்.

சட்டவிரோதமாகத் தாக்குதல் நடத்தியவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி, உச்சபட்ச தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கு நாம் முன்னின்று செயல்படுவோம் என்பதே அதுவாகும்.

இதேவேளை முன்கூட்டியே திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட இந்த மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலாக அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் அனைவரும் பொறுப்புக் கூறவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
10.05.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், சித்திரை 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# மஹிந்த விலகல் - அடுத்தது என்ன?

மஹிந்தவின் பதவி விலகல் தொடர்பில் ஏற்பட்டுவந்த இழுபறிநிலைமை, தற்போது, முடிவுக்கு வந்திருக்கின்றது. ஆனாலும், இது முடிவுதானா – அல்லது பிறிதோர் ஆட்டத்துக்கான ஆரம்பமா, என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. தனது மகனை அரியணையில் அமர்த்தும் இலக்கோடு அரசியலில் விரதமிருந்துவந்த, மஹிந்த பேர்ஷி ராஜபக்ஷவின் பதவி விலகல், அவரைப் பொறுத்தவரையில் மோசமான அரசியல் பின்னடைவுதான்.

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, சிங்கள தேசிய வாதிகளால், நவீன துட்டகைமுனுவாக போற்றப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ, சிங்கள பெரும்பான்மையினராலும் யுத்த வெற்றி நாயகனாகப் போற்றப் பட்டார். இதனை மிகவும் தந்திரமாக, தனது அரசியல் முதலீடாக்கிக் கொண்ட மஹிந்த ராஜபக்ஷ, சேனநாயக்க, பண்டாரநாயக்க வரிசையில், ராஜபக்ஷ குடும்ப அரசியல் பரம்பரையொன்றை ஏற்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக செயல்பட்டார்.

சேனநாயக்க மற்றும் பண்டாரநாயக்க வாரிசு அரசியல் தென்னிலங் கையில் கணிசமான காலம் செல்வாக்குச் செலுத்தியிருந்தாலும்கூட, மஹிந்த ராஜபக்ஷ போன்று, ஒரு குடும்பத்தை எல்லையற்ற அதிகார முள்ளவர்களாக்கும் வகையில் அவர்கள் எவருமே செயல்பட்டிருக்கவில்லை. ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் செல்வாக்கு எவராலும் மதிப்பிடக்கூட முடியாதளவிற்கு அதன் எல்லைகள் நாலாபுறமும் பரந்திருந்தது. இலங் கையின் நவீன அரச குடும்பம் போன்றே, மஹிந்த ராஜபக்ஷவின் நடவ டிக்கைகள் அமைந்திருந்தன.

மஹிந்த ராஜபக்ஷவை தொடர்ந்து, அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்ட, கோட்டாபய ராஜபக்ஷ, தன்னையொரு வித்தியாசமானவராக காண்பித்துக் கொள்ள முயற்சிசெய்த போதிலும்கூட, மஹிந்த ராஜபக்ஷவால் ஏற்படுத்தப்பட்டிருந்த, குடும்ப செல்வாக்கு வட்டத்திலிருந்து விடுபட கோட்டா பயவால் முடியாமலே இருந்தது.

நான்தான் – நீங்கள் தேடிய தலைவனென்று, சிங்கள மக்களுக்குக்கூறிய, கோட்டாபய ராஜபக்ஷ, ஆகக் குறைந்தது சிங்கள மக்களுக்குக்கூட, நேசமான தலைவராக இருக்கவில்லை. அவரின் நேசம் முழுவதும், ராஜபக்ஷ குடும்பத்தை சுற்றியே வட்டமிட்டது. இதன் விளைவாகே – அவர் நேசிப்பதாக சூளுரைத்த சிங்கள – பௌத்தர்களே, அவரை வெளியேறுமாறு கோரி போராடிவருகின்றனர்.

தமிழ் மக்களை பொறுத்தவரையில், ராஜபக்ஷக்கள் எவராக இருப்பினும், அவர்களை அகற்றவேண்டுமென்னும் நிலைப்பாட்டிலேயே, 2010இலிருந்து, வாக்களித்து வந்திருக்கின்றனர். அந்த வகையில் நோக்கினால், ராஜபக்ஷக்களை வெளியேற்ற வேண்டுமென்னும் அரசியல் கோரிக்கையின் சம்பியன்கள் தமிழ் மக்களாவர். தமிழ் மக்கள் ராஜபக்ஷ க்களை வெளியேற்ற எண்ணியபோது, அதனை சிங்கள – பௌத்தர்கள் வேறு கண்ணோட்டத்தில் பார்த்தனர். ஆனால், இப்போது, அவர்களே, ராஜபக்ஷ குடும்பத்தை அகற்ற வேண்டுமென்னும் முடிவில் உறுதியாகப் போராடிவருகின்றனர். அதற்குக் கிடைத்த முதல் வெற்றிதான், மஹிந்த ராஜபக்ஷவின் பதவி விலகல். னாலும் மஹிந்த ராஜபக்ஷ தென்னிலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் அனுபவம்மிக்க ஒரு நரி. மஹிந்த பதவியிலிருந்து வெளியேறும்போதே நாட்டின் ஸ்திர தன்மை, மேலும் சீர்குலையும் வகையிலான நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன. அமைதி வழியில் "காலிமுகத்திடலில்" போராடிக் கொண்டிருந்தவர்கள் மீது, மஹிந்தவின் ஆதரவாளர்கள், வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டி ருக்கின்றனர்.

இது மஹிந்தவின் இன்னோர் ஆட்டத்தை கட்டியம் கூறுகின்றது. ஏனெனில், மஹிந்தவின் அரசியல் ஓய்வு சாதாரணமாக நிகழப்போவதில்லை. ஒன்றில் மீண்டும் வெற்றிக்கான ஆட்டத்தை மஹிந்த பிறிதொரு வகையில் ஆடப் பார்க்கலாம் – அது நாட்டில் மேலும் பல வன்முறைகளுக்கு வழிவகுக்கலாம் – அல்லது, ராஜபக்ஷ குடும்பம் – எக்காலத்திலும் மீளவே முடியாதளவிற்கு, இலங்கையின் அனைத்து ஆட்சியாளர்களுக்குமான மோசமானதொரு செய்தியாக மாறும் நிலைமை ஏற்படலாம். ஆனால், ராஜ பக்ஷக்கள் அவ்வளவு சாதாரணமாக தென்னிலங்கை அதிகார மையத் திலிருந்து வெளியேறப் போவதில்லை.

# கலவர பூமியாக மாறிய காலிமுகத்திடல்!

*பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆத ரவு தெரிவித்து அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தரப் பினர் கோட்டா கோ கமவில் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்ட தரப்பினரை தாக்கியதால் காலிமுகத்திடல் போராட்டகளம் நேற்று கலவர பூமியாக மாறியது.*

*இதைத் தொடர்ந்து காலிமுகத்திடலில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டு வருபவர்கள் தொடர்ச் சியாக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.*

*பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து அலரிமாளிகைக்கு முன்பாக சில தரப்பினர் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தரப்பினர் அலரிமாளிகைக்குள் அனுமதிக் கப்பட்ட நிலையில் அவர்கள் முன்பாக முன்னிலையில் பிரதமர் விசேட உரையை ஆற்றினார்.*

*அவர் விசேட உரையாற்றி முடிவதற்குள் அலரிமாளிகைக்கு வெளியில் பிரதமருக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டிருந்த தரப்பினர் வன்முறையில் ஈடுபட் டனர். அத்துடன், அலரிமாளிகைக்கு முன் பாக செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவி யலாளர்கள் மீது தாக்குதலை மேற்கொண் டனர்.*

*இந்தத் தாக்குதலில் டான் செய்திப் பிரி வின் கொழும்பு அலுவலக செய்தியாளரும் கலவரக்காரர் ஒருவரால் மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு உள்ளாகினார்.*

*இந்நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்கள் மைனா கோ கமவில் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டவர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண் டதுடன் மைனா கோ கமவில் அமைக்கப் பட்டிருந்த கூடாரங்களையும் உடைத்து எறிந்தனர்.*

*இதனையடுத்து கோட்டா கோ கம நோக்கி எதிர்ப்பாளர்கள் முன்னேற முற் பட்டபோது அதனைத் தடுப்பதற்கு பொலிஸ ார், விசேட அதிரடிப்படையினர் முயற்சித்தப் போதிலும் அந்த முயற்சி பலனளிக்கவில்லை.*

*பொல்லுகள், தடிகள், கற்களுடன் கோட்டா கோ கமவுக்குள் ஊடுருவிய கலவரக்காரர்கள் அங்கு வன்முறையில் ஈடுபட்டதுடன் அங்கு அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் சிலவற் றுக்கு தீ மூட்டியதுடன் கூடாரங்களையும் தகர்த்தெறிந்தனர். அத்துடன், அரசாங் கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்ட தரப்பினர் மீதும் தாக்கு தலை மேற்கொண்டனர்.*

*இதனால் கோட்டா கோ கமவில் பதற்றமான சூழல் ஏற்பட்டதுடன் குறித்த பகுதியானது கலவர பூமியானது. இதனை யடுத்து சம்பவ இடத்துக்கு தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸ நாயக்க வருகை தந்ததுடன் வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டார். இதனையடுத்து எதிர்க் கட் சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முஜிபுர் ரஹ்மான் எம்.பி, எரான் விக்ரமரத்ன எம்.பி ஆகியோர் கோட்டா கோ கமவுக்கு வந்த நிலையில் இவர்கள் மீதும் எதிர்ப்பாளர்கள் தடியடி தாக்குதலை மேற்கொண்டனர்.*

## நடந்தது என்ன?

கொழும்பிலிருந்து கோகிலவாணி

*இந்தக் கலவரத்தில் பொலிஸ் அதிகாரிகள் உள்ளடங்கலாக சுமார் 150இற்கும் மேற்பட்ட வர்கள் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக் கப்படுகின்றது. கோட்டா கோ கம, மைனா கோ கமவில் ஏற்பட்ட கலவரத்தையடுத்து கொழும்பு வடக்கு, மத்திய கொழும்பு, கொழும்பு மேற்கு பகுதியில் ஊரடங்கு சட்டம் அமுல் படுத்தப்பட்ட சற்று நேரத்தில் நாடளாவிய ரீதியில் ஊரடங்குசட்டம் அமுல்படுத்தப்பட் டது. கொழும்பு காலிமுகத்திடலில் இளைஞர் தன்னெழுச்சிப் போராட்டம் ஆரம்பிக் கப்பட்டு நேற்றுடன் ஒரு மாதம் ஆகின்ற நிலையில் அமைதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த ஆர்ப்பாட்டத்தை முடக்கும் வகையில் குண்டர்கள் குழு கோட்டா கோ கமவில் இறக்கிவிடப்பட்டதாக சமூக அமைப்புகள் குற்றச்சாட்டுக்களை முன்வைத் துள்ளன.*

*சுமார் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட குண்டர்கள் களத்தில் இறக்கிவிடப்பட்டன ரெனத் கோட்டா கோ கம போராட்டத்தின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான ரெட்டா என்ற ரசிது சேனாரத்ன தனது சமூக வலைத் தளங்களில் தெரிவித்துள்ளார்.*

*இந்நிலையில் கோட்டா கோ கமவில் கடந்த ஒரு மாதமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டு வரும் தரப்பினருக்கு ஆதரவு தெரி விக்கும் வகையில் கொழும்பு தேசிய வைத்தி யசாலையின் ஊழியர்கள், அரச, தனியார் ஊழியர்கள், தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் என சகல தரப்பினரும் கொழும்பு காலிமுகத்திடலை நோக்கி பேரணியாக சென்றனர். இவ்வாறு சென்றவர்களை கட்டுப்படுத்த முயற்சித்த போதிலும் அது பலனளிக்கவில்லை.*

*கொழும்பு காலிமுகத்திடலுக்கு இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் வருகை தந்த நிலையில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான விசேட அறிவுறுத்தல்களை இராணுவத்தினருக்கு வழங்கியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.*

*காலிமுகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தங்களின் கண்டனத்தை தெரிவித்ததுடன் இவ்விடயத்தை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்லவுள்ளதாக அறிவித்தனர்.*

*அத்துடன், கோட்டா கோ கமவில் அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சட்டத்தரணிகள் மனித சங்கிலியாக மாறினர். காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டமைக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் தபால் சேவையாளர்கள் நேற்று முதல் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மே - 10 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 27
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : நவமி




**மேடம்**
உங்கள் செயல் இன்று பகல் வரை இழுபறியாகவே இருக்கும்.சங்கடங்கள் என்ற நிலை மாறி நன்மையைக் காண்பீர்கள்.உங்கள் முயற்சிகளில் வெற்றி பெற கூடுதல் கவனம் தேவை.

**இடபம்**
இன்று மதியம் வரையில் நீங்கள் நினைத்த காரியங்களில் வெற்றி பெறுவீர்கள்.நீங்கள் நினைத்ததை நடத்தி முடிக்க நண்பர்கள் துணை புரிவார்கள். புதிய முயற்சிகளில் கவனம் செலுத்துவீர்கள்.

**மிதுனம்**
இன்று இழுபறியாக இருந்த முயற்சி மாலையில் நிறைவேறும்.கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள்.மகிழ்ச்சியான நாள். உங்கள் முயற்சியில் முன்னேற்றம் உண்டாகும்.நிம்மதியான நாள்.

**கடகம்**
இன்று மதியத்திற்குப்பின் உங்கள் செயல்கள் இழுபறியாகும்.உங்கள் முயற்சிகளில் கவனமும், வார்த்தைகளில் நிதானமும் தேவை.வேலை பளு அதிகரிக்கும். மனஅழுத்தம் ஏற்படும்.

**சிம்மம்**
குடும்பத்தில் உண்டான குழப்பங்கள் மதியத்திற்கு மேல் விலகும்.அலுவலில் இருந்த நெருக்கடிகள் நீங்கும். நிம்மதியான நாள்.மனதில் இருந்த பிரச்சனை விலகி தெளிவான முடிவிற்கு வருவீர்கள்.

**கன்னி**
ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். இழுபறியாக இருந்த முயற்சிகள் வெற்றியாகும்.உங்கள் முயற்சிக்கு குடும்பத்தினரின் ஆதரவு உண்டாகும்.

**துலாம்**
இன்று நீங்கள் நினைத்த செயலில் வெற்றி அடைவீர்கள்.உறவினர் ஒருவர் மூலம் லாபம் உண்டாகும்.நட்பு வட்டம் விரியும்.உங்கள் குடும்பத்தில் இன்று மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
வழக்கமான செயல்களில் கூடுதல் முயற்சி தேவை. உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்தும்படி இருக்கும்.குலதெய்வத்தை நினைத்து முயற்சித்த செயலில் அனுகூலம் உண்டாகும்.

**தனுசு**
நேற்றில் இருந்த நெருக்கடி விலகும். அமைதியான நாள்.இன்று மாலை வரை பொறுமையுடன் செயல்படுங்கள்.இன்று மாலையில் நீங்கள் நினைத்த செயலில் நன்மை உண்டாகும்.

**மகரம்**
இன்று உற்சாகமாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.உறவினர் ஒருவரால் சில சங்கடம் ஏற்பட்டு மறையும்.விழிப்புணர்வுடன் செயல்பட்டு நன்மையை அடைவீர்கள்.

**கும்பம்**
சுறுசுறுப்பாக செயல்பட்டு நினைத்ததை முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். எதிர்பார்த்த மகிழ்ச்சியை அடைவீர்கள்.இன்று உங்கள் செயல் ஒன்றில் அமோக வெற்றியை காண்பீர்கள்.

**மீனம்**
மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.உங்கள் செயல்களில் இருந்த தடை அனைத்தும் விலகும்.இன்று மதியத்திற்குமேல் நீங்கள் எதிர்பார்த்த வெற்றியைக் காண்பீர்கள்.

# ராஜபக்ஷக்களின் ஆட்சியை இந்தியா அகற்ற வேண்டும்!

*சென்னை, மே 10*

இலங்கை ஆட்சிப் பொறுப்பில் இருந்து ராஜபக்ஷ சகோதரர்களை அகற்ற உரிய நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக (ம. தி. மு. க.) பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், “இலங்கை தீவில் சம உரிமை கோரி போராடிய ஈழத்தமிழர்கள் மீது போர் தொடுத்து, இலட்சக்கணக்கானவர்களைப் படுகொலை செய்து போரில் வெற்றி பெற்றதாகக் கூறி, சிங்கள மக்கள் இடையே இன வெறியைத் தூண்டி, தேர்தலில் வாக்குகளைப் பெற்று, ஆட்சிப் பொறுப்புக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தவறான கொள்கைகள், பொருளாதார நடவடிக்கைகளின் விளைவாக, அந்த நாடு கடுமையான நெருக்கடியில் சிக்கி இருக்கின்றது.

இந்தியப் பெருங்கடலில் தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக, இலங்கையை ஒரு தளமாகப் பயன்படுத்த முனைந்த சீனா, ராஜபக்ஷ சகோதரர்களைப் பயன்படுத்தி, அந்த நாட்டுக்கு உள்ளே கால் பதித்தது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டு குத்தகைக்குப் பெற்றார்கள் எண்ணெய்க் கிடங்குகள் அமைப்பதற்கு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். பெருந்தொகையைக் கடனாகக் கொடுத்து, படிப்படியாக இலங்கையைத் தன் கட்டுப்பாட்டுக்கு உள்ளே கொண்டு வர சீனா முயற்சிப்பதைப் புரிந்து கொண்ட இந்



திய அரசு, தன் பங்குக்கு நிதியை அள்ளிக் கொடுத்து, இலங்கை அரசாங்கத்தைத் தங்கள் வயப்படுத்த முனைந்தார்கள். சீனாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையைக் கைவிடச் செய்து, எண்ணெய்க் கிடங்குகள் அமைப்பதற்கான உரிமத்தைப் பெற்றார்கள்.

இன்று, உணவு, எண்ணெய், சமையல் எரிகாற்று போன்ற அன்றாடத் தேவைப் பொருட்கள் கிடைக்காமல், மக்கள் பரிதவிக்கின்றார்கள். மருந்துகள் தட்டுப்பாடு காரணமாக, மருத்துவமனைகளின் செயல்பாடுகள் முடங்கி விட்டன் அறுவை மருத்துவம் நிறுத்தப்பட்டு விட்டது. அரசின் செலவுகளைக் குறைப்பதற்காக, பல நாடுகளில் இருக்கின்ற இலங்கைத் தூதரகங்களை மூடி விட்டார்கள்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க, கடந்த 3 மாதங்களில் மட்டும், 23,000 கோடி ரூபாய் (இந்திய மதிப்பில்) இந்திய அரசு கடன் உதவி அளித்து இருக்கின்றது.

இந்த மாத இறுதிக்குள் அமெரிக்காவுக்கு 7000 கோடி இந்திய ரூபாயும், 2026 ஆம் ஆண்டுக்குள் 25000 கோடி ரூபாயும் இலங்கை அரசு திருப்பித் தர வேண்டும். ஆனால், இலங்கை அரசிடம் பணம் இல்லை. நாடு திவால் ஆகக் கூடிய நிலைமையில் இருக்கின்றது. இலங்கையில் தமிழீழம் அமைக்க பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டும் இனப் படுகொலைப் போர்க் குற்றவாளிகளான ராஜபக்ஷ சகோதரர்களை, பன்னாட்டு நீதிமன்றத்தின் குற்றக்கூண்டில் நிறுத்தித் தண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை, பிரஸல்ஸ் மாநாட்டில், மறுமலர்ச்சி தி.மு. கழகம் முன்வைத்து, தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

இலங்கை மக்களைப் பழி வாங்க வேண்டும். அவர்கள் பட்டினி கிடந்து சாக வேண்டும் என்பது நமது நமது நோக்கம் அல்ல. எரிப்பதற்கு விறகு கிடைக்காமல், தமிழக மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளை உடைத்து எரிப்பதாக, நேற்று என்னிடம் கூறினார்கள். கேட்க வேதனையாக இருந்தது. இலங்கையின் இன்றைய நெருக்கடிக்கு ஒரே தீர்வு, ராஜபக்ஷ சகோதரர்கள் அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும்.

ஆட்சிப் பொறுப்பில் இருந்து ராஜபக்ஷக்களை வெளியேறுமாறு, இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என, இலங்கை தமிழ் அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. எனவே, இலங்கை ஆட்சிப் பொறுப்பில் இருந்து ராஜபக்ஷ சகோதரர்கள் விலகுவதற்கு, அவர்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகின்றேன்” - என்றுள்ளது. (ஐ)

# இலங்கை கடற்படைக்கு எதிராக இராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம்!

*இராமேஸ்வரம், மே 10*

இலங்கை கடற்படையை கண்டித்து இராமேஸ்வரத்தில் மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இராமேஸ்வரம் - தங்கச்சிமடத்தில் விசைப் படகு மீனவர்கள் சார்பாக இலங்கை கடற்படையை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது இலங்கை சிறையிலுள்ள மீனவர்கள் மற்றும் சிறை பிடிக்கப்பட்ட படகுகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தப்பட்டது. அத்துடன், மீனவர்களை கைது செய்யும் இலங்கை கடற்படையை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. (ஐ)



# ஆபத்தில் மன்னார் வளைகுடா் தேங்கும் பிளாஸ்ரிக் கழிவுகளால்

*இராமேஸ்வரம், மே 10*

மன்னார் வளைகுடாவில் பிளாஸ்ரிக் பைகளால் கடல்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் தீவைச் சுற்றிலும் உள்ள மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பக கடல் பரப்பில் பவளப்பாறைகள் அதிகம் உள்ளன. இந்தப் பவளப் பாறைகள் பல அரிய வகை கடல் வாழ் உயிரினங்களின் வாழ்விடமாகவும் உள்ளன. இராமேஸ்வரத்துக்கு வரும் பக்தர்கள் விட்டுச் செல்லும் பிளாஸ்ரிக் கழிவுகள் இந்த பவளப் பாறைகளில் தேங்கி, கடலில் வாழும் நுண்ணுயிரிகள் முதல் மிகப்பெரிய திமிங்கலம் வரை உட்கொள்கின்றன.

முன்னர், அந்தப் பகுதிகளில் பிளாஸ்ரிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டபோதும் தற்போது அந்தத் தடைகள் அமுல்படுத்தப்படுவதில்லை. இதனால், பிளாஸ்ரிக் பயன்பாடு அதிகரித்துள்ளது.

இந்நிலையில், இந்த பிளாஸ்ரிக் கழிவுகளால் மன்னார் வளைகுடா கடலின் ஒட்டுமொத்த உயிரினங்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ஆய்வு அமைப்புகள் எச்சரித்துள்ளன.

(ஐ)

# விலங்கு விசர் நோய்க்கான தடுப்பூசி வடக்கில் இல்லை!

## நாய்க்கடிக்குள்ளாகுவோருக்கு ஆபத்து

**யாழ்ப்பாணம், மே10**

**விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்துகளான ஏ.ஆர்.வி மற்றும் ஏ.ஆர்.எஸ் என்பவை யாழ். போதனா வைத்தியசாலையில் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.**

"நாய்களைக் கண்டால் விலகிச் செலலுங்கள். நாய்க்கடிக்கு உள்ளாகினால் விலங்கு விசர் நோய் தடுப்பூசி மருந்து தட்டுப்பாட்டினால் உயிர்களைக் காப்பாற்ற முடியாது" என்று மருத்துவர்கள் தெரிவித்துள் ளனர்.

நாய்க்கடிக்கு உள்ளாகியவர்களுக்கு ஏ.ஆர்.வி. மற்றும் ஏ.ஆர்.எஸ் தடுப்பூசி மருந்துகள் வழங்கப்படாவிடின் நீர் வெறுப்பு நோய்க்கு உள்ளாகி உயிரிழப்பு ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-03)





# வடக்கு சுகாதாரத்துறை கவனவீர்ப்பு போராட்டம்!

## யாழ். போதனா வைத்தியசாலைக்குள் நடந்தது

யாழ்ப்பாணம், மே 10

வடக்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர், யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து யாழ். போதனா வைத்தியசாலையின் உள்ளே நேற்றுக் காலை 9 மணி முதல் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை காலை 9 மணி முதல் மேற்கொண்டனர்.

இதன்போது அடக்குமுறை ஊடாக தேசிய கொள்கைகளை அழித்து ஆக்கிரமிப்பில் ஆட்சி செய்கின்ற அரசே மக்கள் அபிப்பிராயத்துக்கு தலை வணங்கவும்!,சுகாதாரத் துறையை தனியார் மயப்படுத்துவதை தடுத்து நிறுத்துவோம்!, அரசின் மோசமான நிதி நிர்வாகம் காரணமாக அத்தியவசியமான மருந்துகள் இல்லாமல் சுகாதார கட்டமைப்பு சீரழிந்து வருகிறது, மக்களின் உயிர்கள் ஆபத்தில் உள்ளன!, ரிபொருள் இல்லை மின்சாரம் இல்லை மருந்து இல்லை பொறுப்பேற்க எந்த ஒரு அரசும் இல்லை!, இலவச சுகாதார மையத்தில் அனைவரது உயிர்கள் ஆபத்தில் உள்ளன!, அனைவருக்கும் ஒரே சட்டத்தை நிலைநாட்டவும்!, முறையற்ற நிதி மேலாண்மை, பணவீக்கத்துக்கு சமமான வருமானத்தை உறுதி செய்வோம்!, அரசின் அடக்குமுறையை இல்லாது ஒழிப்போம் என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்த போராட்டத்தின்போது அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஐந்து மாவட்டங்களினதும் பிரதிநிதிகள், யாழ் . போதனா வைத்தியசாலையில் தாதியர்கள் , யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதன்போது வைத்தியசாலை வளாகத்துக்குள் புலனாய்வுப் பிரிவினர் கண் காணிப்பில் ஈடுபட்டு இருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (அ-03)

# வீட்டு பாவனைக்கான சமையல் எரிவாயு விநியோகத்தை இடைநிறுத்தியது லிட்ரோ

கொழும்பு, மே 10

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் நேற்று முதல் வீட்டு உபயோகத்துக்காக விநியோகிக்கப்படாது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வீட்டு உபயோகத்துக்காக வெளியிடப்படாது என்பதால், எரிவாயு விநியோக நிலையங்களில் வரிசையில் நிற்க வேண்டாம் என அந்த நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்நாட்டு எரிவாயு கையிருப்பு தீர்ந்துவிட்டதால், தொழிற்சாலை தேவைகளுக்கு மட்டுமே எரிவாயு சிலிண்டர்கள் வெளியிடப்படும் என்று லிட்ரோ தலைவர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், தலா 3,500 மெற்றிக் தொன் இரண்டு எரிவாயு ஏற்றுமதிக்காக 7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக ஹேரத் கூறினார்.எரிவாயு இருப்புக்கள் எதிர்வரும் வியாழன் மற்றும் சனிக் கிழமைக்கு இடையில் இலங்கையை வந்தடையும் என லிட்ரோ தலைவர் தெரிவித் தார். (அ)

# கொழும்பு, கம்பஹா மக்களுக்கு உடன் எரிவாயுவை வழங்குங்கள்

## லிட்ரோ தலைவருக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, மே 10

லிட்ரோ நிறுவன தலைவருக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விசேட ஆலோசனையொன்றை வழங்கியுள்ளார்.

அதற்கமைய, தற்போது கையிருப்பில் உள்ள எரிவாயு சிலிண்டர்களில் ஒரு தொகையை கொழும்பு மற்றும் கம்பஹா மக்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதி லிட்ரோ நிறுவனத்திற்கு அறிவித்துள்ளார்.

அதற்கமைய, கொழும்பு மற்றும் கம்பஹா நகரங்களில் வாழும் மக்களுக்காக தலா 15,000 எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத் தலைவர் தெரிவித்துள்ளார். (அ)

# பிரதமர் பதவி விலகுவாரானால் அரசியல் நெருக்கடி உருவாகும்

## ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ கூறுகிறார்

கொழும்பு, மே

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகினால் அரசியல் நெருக்கடி உருவாகும் என முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.



போராட்டத்துக்கு தயாராகுங்கள். வெற்றியா ,தோல்வியா என்பதை தீர்மானித்துக் கொள்ளலாம். பொறுத்தது போதும் என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பொதுஜன பெரமுன ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். (அ)

# இலங்கைக்கான கடன் செலுத்தும் காலத்தை நீடித்தது பங்களாதேஷ்!

கொழும்பு, மே 10

நாணய பரிமாற்ற ஒப்பந்தம் மூலம் பங்களாதேஷ் இலங்கைக்கு வழங்கிய 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை செலுத்துவதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.அதற்கமைய மேலும் ஒரு வருடம் காலம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக வெளி நாட்டு ஊடகமொன்றில் செய்தி வெளியாகியுள்ளது. (அ)

# பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் மக்களை ஜனநாயக ஒடுக்க சட்டங்களை போட்டு ஒடுக்கக்கூடாது

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் கூறுகிறார்

கிளிநொச்சி, மே 10

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவியாய்தவிக்கின்ற மக்களை அவசரகாலச்சட்டம் உள்ளிட்ட ஜனநாயக ஒடுக்கச் சட்டங்களை விதித்து மேலும் நெருக்கடிக்குள்ளாக்குவதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது அது நாட்டை மேலும் மோசமான நிலைக்கே இட்டுச் செல்லும் அது பாரிய எதிர்விளைவுகளையே உண்டாக்கும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

தற்போது நெருக்கடி நிலைமைக்ள தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மிகப் பெரிய எதிர்பார்ப்புகளோடும் நம்பிக்கையோடும் தான் இந்த அரசாங்கத்தை மக்கள் தெரிவு செய்திருந்தனர். இரண்டு ஆண்டுகளுக்குள் அந்த நம்பிக்கையில் ஏற்பட்டிருக்கும் சரிவை மக்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இதனாலேயே

மக்கள் வீதியில் இறங்கி தமது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர். இந்த நிலையில் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அரசாங்கம் துரித கதியில் தீர்வு காணும் நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

மாறக நாளாந்த வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியோடு சட்ட ரீதியான நெருக்கடியையும் ஏற்படுத்தினால் மக்களின் கோபம் எல்லை மீறிவிடும். அது நாட்டைப் பலவீனப்படுத்தும் இடத்துக்கே கொண்டு செல்லும். அதனால் வெளிச்சக்திகளே பலனைப் பெறும் நிலை ஏற்படும். அரசியல் பொருளாதார நெருக்கடிகளை உரிய முறையில் தீர்க்கவில்லை என்றால் அபிவிருத்தி உட்பட எந்த இலக்கையும் எட்ட முடியாது என்பதை சமத்துவக் கட்சி தொடர்ச்சியாக எடுத்துரைத்து வந்திருக்கிறது.

எனவே சட்டங்களால் மக்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தி நெருக்கடிக் குள்ளாக்குவதற்குப் பதிலாக அனைத்துத் தரப்பினரின் பங்கேற்போடும் ஒத்துழைப்போடும் நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற தேசிய நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண அரசாங்கம் முன்வரவேண்டும்.

மிக வளமும் அழகும் நிறைந்த இந்தச் சின்னஞ்சிறு தீவு தொடர்ந்தும் எரியும் தேசமாகவும் கண்ணீரைச் சிந்துகின்ற கையேந்துகின்ற நாடாகவும் இருக்கக்கூடாது. இதற்கு இலங்கைச் சமூகங்களுக்களுக்கிடையில் பல்லின சமத்துவத்தின் அடிப்படையில்

வெளிப்படையும் நியாயமுமான தீர்வைக் காண்பதே ஒரே வழியாகும். அதற்கான காலம் கனிந்துள்ளது. இந்தக் காலத்தை எந்த வகையிலும் கையிழக்க முடியாது என்று

சமத்துவக் கட்சி வலியுறுத்துகின்றது- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இனம், மதத்தை முன்னிறுத்திய அரசியலே இலங்கையின் சாபம்

## கர்தினால் மல்கம் ஆண்டகை கூறுகிறார்

கொழும்பு, மே 10

இனங்களையும் மதங்களையும் முன்னிறுத்தி நடத்தப்படும் அரசியல் போராட்டமே நாட்டில் தற்போது நிலவும் குழப்பங்களுக்கு முக்கிய காரணம் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது உரையாற்றிய கர்தினால், காலி முகத்திடலில் இருந்து எதிரொலிக்கும் ஒலிகள் புதிய சுதந்திரப் போராட்டத்தின் குரல்.

மகத்தான அதிகாரத்துடன் ஆளுகை செய்ய முடியாத ஒரு நபர் நிலவும் நெருக்கடியை உச்சக்கட்டத்தை நோக்கி கொண்டு சென்றுள்ளார். என்பது தெளிவாக தெரிகிறது.



60 ஆண்டுகளுக்கும் மேலாக நிலவும் அரசியல் நிகழ்ச்சி நிரல் அரசியல் படு கொலைகள், பலவந்தமாக காணாமல் போதல்கள் மற்றும் உள்நாட்டு மோதல்கள் ஆகிய வற்றுடன் சட்டவிரோதமான ஒழுக்கமற்ற அரசை உருவாக்கி யுள்ளது.

முன்னெப்போதையும் விட தற்போது அமைப்பு மாற்றமும் புதிய தொடக்கமும் தேவை- என்றார். (அ)

# பெரும்பான்மை கிடைத்தால் பிரதமர் பதவியை ஏற்க தயார்!

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

**கொழும்பு, மே10**

**113 பெரும்பான்மை பாராளுமன்றத்தில் கிடைக்குமாக இருந்தால் நிச்சயமாக பிரதமர் பதவியை ஏற்க தான் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**



இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நாம் எடுக்கும் எந்த முடிவும் மக்களின் குரலை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருக்க வேண்டும். மக்கள் வாழும் உரிமையை கோருகின்றனர். அந்த சவாலை ஏற்க நாம் தயார். முழுமையான மாற்றம் வேண்டும் என மக்கள் கோருகின்றனர்.

பாதி மாற்றம் செய்து சரியாக நாட்டுக்காக சேவையாற்ற முடியாவிடின் மக்கள் சஜித் கோஹோம் என்பார்கள். நான் தோல்வி எனின் அவ்வாறு கோசம் எழுப்புவதில் பிரச்னை கிடையாது. கையையும் காலையும் கட்டிப்போட்டு ஆட்சியை செய்து அதன் அடிப்படையில் கோ ஹோம் என்று சொல்லும் நிலை ஏற்படுவதை நான் விரும்பவில்லை.

ஆதரவு வழங்கிவிட்டு ரஞ்சித் சியம்பலாபிட்டிய விலகியது போன்ற நிலைமை வரக் கூடாது. 113 பெரும்பான்மை பாராளுமன்றத்தில் கிடைக்குமாக இருந்தால் நிச்சயமாக பிரதமர் பதவியை ஏற்க தான் தயார்.-என்றார். (அ)

# இலவச சுகாதார சேவை நாட்டில் கடுமையாக வலுவிழந்துவிட்டது!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 10

இலவச சுகாதார சேவை கடுமையாக வலுவிழந்து விட்டது .இதனால் நிச்சயம் உயிரிழப்புகள் அதிகரிக்கும். சிறுவர்களின் கல்வி சீரழிக்கப்பட்டுள்ளது, சிறுவர்கள் பட்டினியால் வாடுகின்றனர். இதற்குரிய தீர்வாக எதனையும் வழங்க இன்னமும் பாராளுமன்றம் தயாரானதாக தெரியவில்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். போதனா வைத்தியசாலைக் கிளை தெரிவித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ் போதனா வைத்தியசாலைக் கிளை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்-

வடக்கு மாகாண வைத்தியர்களும், தாதியர்களும் மற்றும் சக மருத்துவப் பணியாளர்களும், நிர்வாகப் பணியாளர்களும் இங்கு இன்று ஒரே நோக்கத்துக்காக ஒன்று கூடி இருக்கின்றோம். தங்களது சுயலாப நோக்கங்களுக்காகவும் அதீத செல்வச் சுகபோக வாழ்க்கைக்காகவும் இந்த நாட்டு மக்களின் வாழ்வினை சீரழித்து பாரிய மோசடிகளில் ஈடுபடும் அரசியல் வாதிகளைச் சிறைக்குத் தள்ளி சுபீட்சமான இலங்கையினை கட்டியெழுப்புவதே இங்கு கூடியுள்ள எங்களின் நோக்கமாகும்.

சகிக்க முடியாத மோசடிகளால் இந்த நாட்டு மக்களின் அடிப்படை தேவைகளான உணவு, கல்வி சுகாதாரம் என்பவற்றை எட்டாக்கனியாக்கி மக்களை தெருவில் அலையவிட்டு, தங்களின் கதிரைகளை இறுக பற்றி கொள்வதற்காக அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் பொருத்தமற்ற நேரத்தில் அமுல்படுத்தியுள்ளது.

ஊழல் மோசடிகளின் மூலம் தங்களது வாழ்வும் எதிர்கால தலைமுறையும் சீரழிக்கப்படுவதை உணர்ந்த மக்கள் பெரும் எழுச்சி கொண்டு நாடளாவிய ரீதியில் பெரும் போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றார்கள். மக்களின் ஒரு பகுதியினராகிய நாங்கள், நாட்டில் உள்ள பெருமளவு வைத்தியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வைத்திய அதிகாரிகள் சங்கமானது ஏனைய வைத்தியசாலைப் பணியாளர்களையும் இணைத்து மக்களின் எழுச்சிக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகிறோம். அதன் ஒரு பகுதியாக இன்று(நேற்று) வடக்கு மாகாணத்தை சேர்ந்த மருத்துவப் பணியாளர்கள் இங்கு ஊழல் அரசாங்கத்திற்கு எதிராகக் குரல்கொடுக்க ஒன்று திரண்டுள்ளோம். இலவச சுகாதார சேவை கடுமையாக வலுவிழந்துவிட்டது .இதனால் நிச்சயம் உயிரிழப்புகள் அதிகரிக்கும். சிறுவர்களின் கல்வி சீரழிக்கப்பட்டுள்ளது, சிறுவர்கள் பட்டினியால் வாடுகின்றனர். இதற்குரிய தீர்வாக எதனையும் வழங்க இன்னமும் பாராளுமன்றம் தயாரானதாக தெரியவில்லை.

இந்த இக்கட்டான-ஆபத்தான காலகட்டத்தில் எமக்கு உதவி புரியும் உள்நாட்டு , வெளிநாட்டு அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்கும், இந்தியா மற்றும் அனைத்து நாடுகளுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நமது நாட்டில் கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் நாட்டினை முன்னேற்ற வேண்டும் என நினைக்கவில்லை. இனவாதம் என்னும் போதையை யுக்தியாகக் கொண்டு சிறுபான்மை மக்களை அடக்கியாண்டு, பெரும்பான்மை மக்களிடம் போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு, ஏற்பட்ட போர் வன்முறைகளின் இடையே கச்சிதமாக பெருமளவு பணத்தை தங்களது சுகபோகத்திற்காகச் சூறையாடின.

இதனை மக்கள் கண்டு கொள்ளாமல் இருக்க காலத்திற்குக் காலம் இனவாத தூண்டல்கள் மூலம் வன்முறைகளை ஏற்படுத்தினார்கள் .இதனை மக்கள் இன்று காலம் கடந்தேனும் உணர்ந்து எழுச்சி அடைந்துள்ளனர். இது இலங்கைக்கு கிடைத்த பெரு வெற்றியாகும். நாங்கள் வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் வைத்தியர்களைப் பிரதிநிதிப்படுத்துவதாலும், இந்தப் பிரதேசம் அரசாங்கங்களின் நீண்டகால அநீதிகளை கண்டுள்ளதாக இங்குள்ள மக்கள் கருதுவதாலும் சுபீட்சமான இலங்கையினைக் கட்டியெழுப்புவதற்கு எங்கள் பக்கக் கருத்துக்களும் இருக்கின்றது. இந்த நாட்டில் நிரந்தர அமைதி , பொருளாதார மேம்பாடு ஏற்படுவதற்கு இனங்களுக்கிடையே நல்லிணக்கம் பாரிய புரிந்துணர்வுடன் கொண்டுவரப்படவேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் நடைபெற்ற வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்களுக்கு நீதிப் பொறிமுறை ஒன்று ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக உருவாக்கப்பட வேண்டும். அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டு அவர்களது குடும்பங்கள் வாழ வைக்கப்பட வேண்டும். அனைத்து மதங்களும், இனங்களும் சம அந்தஸ்தும் , அச்சமின்றி வாழும் உரிமையும், அரசியல் உரிமையும் சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்தப்பட வேண்டும். சிங்கள ,தமிழ் , முஸ்லிம் மற்றும் அனைத்து மக்களும் இன பேதமின்றி மனிதாபிமானத்தை முன்னிறுத்தி நாம் கனவு காணும் இலங்கையினைக் கட்டியெழுப்ப அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுப்போம்- என்றுள்ளது. (அ)

# மேலும் 100 மில்லியன் டொலர் கடனை எதிர்பார்க்கும் அரசு!

கொழும்பு, மே 10

சீனாவின் ஆதரவுடன் செயல்படும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி இலங்கைக்கு 100 மில்லியன் டொலர்களை அவசர உதவியாக வழங்குவது குறித்து பரிசீலித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிதியமைச்சு ஒரு அறிக்கையில், கடனளிப்பவரிடமிருந்து அரச வங்கிகளுக்கு அந்நிய செலாவணி பணப்புழக்க ஆதரவை இலங்கை கோரியுள்ளதாக தெரிவித்துள்ளது. (அ)

# இரணைமடுக் குளத்தில் மூழ்கி மீனவர் மரணம்!

கிளிநொச்சி, மே 10

கிளிநொச்சி இரணைமடு குளத்தில் நேற்று முன்தினம் மாலை மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர் நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்டவர் சாந்தபுரம் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் என தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பிரதமர் பதவிக்கு நிமலின் பெயரும்!

கொழும்பு, மே 10

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகிய பின்னர், அப்பதவிக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வாவின் பெயரை பரிந்துரைக்க சிறீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது.

மஹிந்த அமரவீரவின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டதாக தெரியவருகிறது.

இதன்போது அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகிறது.

எவ்வாறாயினும், கலந்துரையாடலில் பங்குபற்றியவர்களில் சிலர் அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொள்வதற்கு இணக்கம் தெரிவித்திருந்த நிலையில், மேலும் பலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# அரசுக்கு ரணில் கடும் எச்சரிக்கை

கொழும்பு, மே 10

“அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி கோட்டா கோகம போராட்டத்தை சீர்குலைக்க முற்பட்டால், அனைத்து கலந்துரையாடல்களிலிருந்தும் விலகுவேன். நெருக்கடியைத் தீர்ப்பதில் அரசுக்கு உதவுவதை நிறுத்துவேன்.”

-இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சி தலைவர்கள் கூட்டத்தின்போதே, ரணில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபர் உடனே பதவி துறக்கவேண்டும்!

## கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, மே 10

**ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் உடனடியாக பதவி விலக வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின், ருவிட்டர் பதிவில் இவ்விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. அமைதியான முறையில் போராடியவர்கள் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் சம் பவத்தையும் கூட்டமைப்பு கண்டித்துள்ளது. (அ)

## மன்னார் மாவட்டத்தில் எரிபொருள்கள் சீராக வழங்குவது தொடர்பில் ஆராய்வு

கொழும்பு, மே 10

தற்போதைய சூழ்நிலையில் மன்னார் மாவட்டத்தில் விவசாயம், மீன்பிடி மற்றும் வீட்டுத் தேவைகளுக்கான எரிபொருள் விநியோகத்தை எவ்வாறு சீரான முறையில் வழங்குவது குறித்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் விவசாயம் , மீன்பிடி மற்றும் வீட்டுத் தேவைகளுக்கான எரிபொருள் விநியோகத்தை எவ்வாறு சீராக வழங்குவது தொடர்பாக நேற்று பொலிஸ் அதிகாரிகள் ,மீனவர் சங்கங்கள், எரிபொருள் நிலையங்களின் உரிமையாளர்கள் அரச உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து சங்கங்களுக்கு எவ்வளவு எரிபொருள் கொடுக்க வேண்டும் என்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மக்களுக்கு எரிபொருட்கள் வழங்குவதற்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அவர்களுக்கான குடும்ப அட்டைகளை விநியோகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த குடும்ப அட்டையின் அடிப்படையில் இனி மேல் மக்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

மண்ணெண்ணெய் மட்டுமல்ல ஏனைய தேவைகளுக்கும் அந்த குடும்ப அட்டையை பயன்படுத்த கூடியதாக இருக்கும்.

மேலும் விவசாயத்துக்கு ஒரு ஏக்கருக்கு 3 உழவுக்கும் சேர்த்து 25 லீற்றர் டீசல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாவது உழவுக்கான 10 லீற்றர் டீசல் வழங்கி ஒரு வாரத்திற்கு பின்பு 2 ஆவது, மற்றும் 3 ஆவது உழவுக்கு ஒரு வார கால இடைவெளியில் டீசல் வழங்கப்படும்.

அதற்கான எரிபொருள் நிலையங்களையும் , கமநல சேவைகள் நிலையங்கள் அடிப்படையில் தெரிவு செய்து பயனாளிகள் விவரம் எரிபொருள் நிலையங்களுக்கு வழங்கி வைக்கப்படும்.

அதனடிப்படையில் பயனாளர்கள் எரிபொருள்களை பெற்றுக்கொள்ள முடியும் என குறித்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாத திகதி நாளை தீர்மானிக்கப்படும்

கொழும்பு, மே. 10

அரசாங்கத்துக்கு எதிரான அவநம்பிக்கை பிரேரணை மீதான விவாதத்ததை நடத்தும் திகதி நாளை தீர்மானிக்கப்படவுள்ளது.

நேற்று முற்பகல் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது இது தொடர்பான தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அதேநேரம் ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஒழுங்கு பத்திரத்தில் உள்ளடக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர கூறினார். (அ)

## போராட்டக்காரர் மீது தாக்குதல் ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம்

கொழும்பு, மே 10

காலி முகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது ஆளுங் கட்சி ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கோழைத்தனமான தாக்குதலை ஐக்கிய தேசியக் கட்சி கண்டித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு மக்கள் அரசிடம், கோரிக்கை விடுத்துள்ள வேளையில் அரசு வன்முறையை கையில் எடுப்பது வேதனையளிக்கின்றது எனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது. (அ)

# காலி முகத்திடலின் வன்முறைக் காட்சிகள்!



















ஈழநாடு



# மு.க. ஸ்டாலின் தலைமையிலான

# தி.மு.க. அரசின் ஓராண்டு ஆட்சி சாதனையா, சாதாரணமா?

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆறாம் திகதி நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் மே 2ஆம் தேதி எண்ணப்பட்டன. இதில் தி.மு.க. கூட்டணி பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றியது. தி.மு.க. கூட்டணி ஒட்டுமொத்தமாக 159 இடங்களையும் தி.மு.க. மட்டும் 133 இடங்களையும் கைப்பற்றின.

மே 7ஆம் திகதியன்று ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவை பதவியேற்றது.

ஐந்தாண்டுகள் ஆட்சியிலிருக்கும் ஒரு அரசை மதிப்பிட ஓராண்டு காலம் என்பது போதுமானதல்ல என்றாலும், அடுத்த நான்காண்டுகளில் அந்த அரசு செல்லவிருக்கும் திசையை சுட்டிக் காட்டுவதற்கான சமிக்ஞையை ஓராண்டில் நிச்சயமாக கவனிக்க முடியும்.



பத்தாண்டுகளுக்குப் பின்பாக தி.மு.க. ஆட்சியைப் பிடித்ததை, அக்கட்சியினர் பெரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். ஆனால், அப்படிக் கொண்டாடுவதற்கான சூழலில் தமிழ்நாடு அந்த நேரத்தில் இல்லை. கொரோனா மிகத் தீவிரமாகப் பரவ ஆரம்பித்திருந்தது. கொரோனாவின் முதலாம் அலையைவிட இரண்டாம் அலை மிக மோசமானதாகவும் கடுமையான உயிரிழப்புகளை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்குமென சுகாதார நிபுணர்கள் எச்சரித்தபடி இருந்தனர்.

இதனால், உடனடியாக ஊரடங்கை அமல்படுத்த வேண்டிய நிலை இருந்தது. முந்தைய ஊரடங்கினால் ஏற்பட்ட வரி இழப்புகள், மக்களின் பொருளாதார இழப்புகள் அரசின் முன்பாக பூதாகரமாக நின்றன. அதே நேரம் மாநிலத்தின் நிதிநிலையும் சொல்லத்தக்க நிலையில் இருக்கவில்லை.

இதையெல்லாம் தாண்டி, சித்தாந்த ரீதியில் எதிர் நிலையில் இருக்கும் மத்திய அரசு மாநில அரசுக்கு எந்த அளவுக்கு ஒத்துழைக்குமென்று தெரியாத நிலை இருந்தது.

பதவியேற்றவுடன் ஆவின் பாலின் விலையை லிட்டர் ஒன்று மூன்று ரூபாய் குறைத்தது, பெண்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணம், குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண நிதியாக இரண்டாயிரம் ரூபாய் உள்ளிட்ட அறிவிப்புகளை வெளியிட்டார். இதில் பெண்களுக்கு பேருந்துகளில் இலவசப் பயணம் என்ற அறிவிப்பு பெரும் வரவேற்பைப் பெற்றது. ஆனால், ஆட்சிக்கான மிகப் பெரிய சவால உடனடியாகக் காத்திருந்தது.

### கொரோனா முன்வைத்த முதல் சவால்

தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது கொரோனா பரவல் உச்சகட்டத்தை அடைந்திருந்தது. அடுத்த சில இரு வாரங்களில் தினசரி கொரோனா தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 36 ஆயிரத்தைத் தொட்டது. அதாவது மே 21ஆம் திகதி மட்டும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 36,184. சிகிச்சையில் இருப்பவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 74 ஆயிரமாக இருந்தது. இதன் காரணமாக மாநிலம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளில் படுக்கைகள் முழுவதுமாக நிரம்பின. பல மருத்துவமனைகளில் ஆம்புலன்ஸ் வாகனத்திலேயே நோயாளிகள் உயிரிழந்தனர்.

சென்னை ராஜீவ் காந்தி அரசு தலைமை மருத்துவமனையில் ஆம்புலன்ஸ்கள் நீண்ட வரிசையில் நோயாளிகளைச் சுமந்துகொண்டு காத்திருந்தனர். இதற்கிடையில் மற்றொரு சவாலும் ஏற்பட்டது. மாநிலம் முழுவதுமே ஆக்சிஜனுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டது. 24ஆம் திகதியே முழுமையான ஊரடங்கிற்கு அரசு உத்தரவிட்டது.

மக்களின் உயிரோடு தொடர்புடைய இந்த சவாலை குறிப்பிடத்தக்க அளவுக்கு மாநில அரசு சிறப்பாகவே கையாண்டதாகத்தான் சொல்லவேண்டும். ஆக்சிஜன் பற்றாக்குறையைச் சமாளிக்க அரசு எடுத்த நடவடிக்கைகளும் குறிப்பிடத்தக்க கவனத்தைப் பெற்றன.

இருந்தபோதும் கொரோனா தொற்றினால் ஏற்பட்ட மருத்துவ நெருக்கடியும் ஊரடங்கினால் ஏற்பட்ட பொருளாதார இழப்பும் புதிய அரசுக்கு மிகப் பெரிய சவாலாகவே இருந்தது.

**- முரளிதரன் காசி விஸ்வநாதன்**

இதனால், மாநில அரசு தனது முதலாவது பட்ஜெட்டைத் தாக்கல்செய்தபோது, பெட்ரோலின் விலையை ஒரு லிட்டருக்கு 3 ரூபாய் குறைத்ததைத்தவிர, குறிப்பிடத்தக்க அளவில் பெரிய அறிவிப்புகள் எதையும் வெளியிடவில்லை. ஆனால், கடந்த ஓராண்டில் மாநில அரசு நிதிநிலையைக் கையாண்ட விதம் பெரிதாக விமர்சனத்திற்கு உள்ளாகாத அளவிலேயே இருந்தது.

ஆனால், முதலாவது பட்ஜெட்டை தாக்கல் செய்து, ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்கு முன்பாகவே பருவமழை தமிழ்நாட்டில் தீவிரமடைந்தது. முன்கூட்டியே பெய்ய ஆரம்பித்த பருவமழை, மாநிலத்தின் பல இடங்களில் மிகத் தீவிரமாகப் பெய்தது. ஏற்கனவே மிகச் சாதாரணமான நிலையில் இருந்த மழைநீர் வடிகால் அமைப்புகள் இந்தப் பருவமழையைத் தாக்குப்பிடிக்க முடியாமல் திணறினர். தலைநகர் சென்னையின் பல பகுதிகள் நீரில் மிதந்தன.



ஒரு முறை மழை பெய்து, அதிலிருந்து மீள்வதற்குள் மீண்டும் மழைபெய்து சென்னையைத் தத்தளிக்கவைத்தது. இதில் மக்களுக்குக் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது என்றாலும், அமைச்சர்களும் முதலமைச்சர்களும் களத்தில் நின்று பணியாற்றியது கவனத்தைப் பெற்றது.

இவை தவிர்த்து, நீட் தேர்வை நீக்கும் விஷயத்தில் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது, புதிய கல்விக் கொள்கைக்கு எதிர்ப்பு, பல்கலைக்கழகங்களுக்கு ஆளுநர் வேந்தராக இருப்பதை நீக்குவது என மாநில உரிமைகள் குறித்த திசையில் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட ஏழு பேரை விடுதலை செய்யும் விவகாரத்தில், குடியரசுத் தலைவருக்குக் கடிதம் எழுதியது விமர்சனங்களை ஏற்படுத்தினாலும் அந்த விவகாரத்தில் தொடர்ந்து கவனம் செலுத்துவதும், சம்பந்தப்பட்டவர்களை தொடர்ச்சியாக சிறை விடுப்பில் இருக்க அனுமதித்திருப்பதும் அந்தத் தரப்பின் பாராட்டைப் பெற்றுத் தந்திருக்கிறது.



மேலும், பதவியேற்று சில நாட்களிலேயே அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கும் நீதிமன்றத் தீர்ப்பை செயல்படுத்தும்விதமாக பல கோவில்களில் பிராமணரல்லாதோரும் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டனர். இதனை எதிர்த்து இந்து அமைப்புகள் போராடினாலும் அந்த முடிவில் அரசு உறுதியாக இருந்தது, பாராட்டுகளைப் பெற்றுத்தந்தது.

அதேபோல, மாநிலத்தின் பொருளாதாரத்தை சீராகக் கொண்டுசெல்ல ரகுராம் ராஜன், எஸ்தர் டஃப்லோ, ஷாந்த்ரே உள்ளிட்டோரை அடக்கிய குழுமை அமைத்ததும் கவனிக்கத்தக்க நடவடிக்கையாக இருந்தது.

தொடர்ச்சியாக, மாநிலத்திற்கு முதலீடுகளை ஈர்ப்பதில் கவனம் செலுத்துவது, மதம் சார்ந்த கலவரங்களோ, விரும்பத்தகாத நிகழ்வுகளோ நடக்காமல் பார்த்துக் கொள்வது போன்றவற்றிலும் தி.மு.க. அரசு பாராட்டுகளைப் பெற்றுவருகிறது.

தமிழ்நாட்டில் கோவில்கள் அனைத்தும் இந்து சமய அறநிலையத் துறையின் கண்காணிப்பின் கீழ் உள்ள நிலையில், அவற்றை அந்தக் கண்காணிப்பிலிருந்து விடுவிக்க வேண்டுமென்ற பிரச்சாரம் தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பே துவங்கியிருந்தது. தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு இந்தப் பிரச்சாரம் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அறநிலையத் துறையின் செயல்பாடுகளை வேகப்படுத்தியதன் மூலம், அந்தத் துறைக்கு எதிரான பிரச்சாரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

கல்வி, பொருளாதாரப் பகிர்வு, அதிகாரப் பகிர்வு போன்றவற்றைப் பொருத்தவரை, தொடர்ந்து மத்திய அரசோடு மாநில அரசு மோதிவருகிறது. தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே இந்த போராட்டம் மிக முக்கியமானது. போராடித்தான் உரிமைகளைத் தக்கவைக்க முடியும். இழந்த உரிமைகளைப் பெற முடியும். அந்தத் திசையில் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறார் மு.க. ஸ்டாலின்.

ஆனால், விமர்சனங்களும் இல்லாமல் இல்லை.

2006 - 2011 இடையிலான காலகட்டத்தில் தமிழ்நாட்டில் நிலவிய கடுமையான மின் தட்டுப்பாடு அப்போது ஆட்சியிலிருந்த தி.மு.க. அரசுக்கு மிக மோசமான பெயரை ஏற்படுத்தியது. 2011ல் அக்கட்சி அடைந்த தோல்விக்கு இந்த மின்வெட்டும் ஒரு காரணமாகச் சொல்லப்பட்டது. இருந்தபோதும், ஆட்சிக்கு வந்து சில மாதங்களிலும் தற்போது கோடை காலத்திலும் ஆங்காங்கே மின்வெட்டு ஏற்படுவது, அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த மின்வெட்டிற்கான காரணங்களை அரசைச் சேர்ந்தவர்கள் அவ்வப்போது முன்வைத்தாலும், இரவு நேரங்களில் நிகழும் மின் தடை கடுமையான அதிருப்திக் குரல்களை ஏற்படுத்திவருகிறது.

இதற்கு அடுத்த படியாக, கடந்த சில நாட்களில் பொலிஸ் காவலில் சிலர் உயிரிழந்திருக்கும் விவகாரம், மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் கடுமையான எதிர்வினைகளை உருவாக்கியுள்ளது. எடப்பாடி கே. பழனிச்சாமி தலைமையிலான ஆட்சியின்போது சாத்தான் குளத்தில் தந்தையும் மகனும் காவல் நிலையத்தில் அடித்துக் கொல்லப்பட்ட விவகாரத்தை தி.மு.க. மிகப் பெரிய அளவில் விமர்சனம் செய்தது. (09 ஆம் பக்கம் பார்க்க...)

## அகிலன் திருச்செல்வம் கவிதைகள்:

# போரின் வலியை சுமந்த வரிகள்!

**ஈழத்தின் பன்முக ஆளுமை மிக்க இளம் கவிஞனான அகிலன் திருச்செல்வம் 1989 மே பத்தில் ஈழ மண்ணில் விதையாக்கப்பட்ட நாள் நினைவாக இக்கட்டுரை**

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா**



எண்பதுகளின் பிற்பகுதியில் எழுச்சிமிகு கவிதைகளை படைத்த ஈழத்தின் இளம் கவிஞர்களில் அகிலன் திருச்செல்வம் குறிப்பிடத்தக்கவர். அகிலன் திருச்செல்வம் கவிதைகள் போரின் வலியை சுமந்த வரிகளாய் பரிணமத்தன. 1989 மே பத்தாம் நாள் தனது பத்தொன்பது வயதினில் தியாகத்திருவாய் ஈழ மண்ணில் விதையாக் கப்பட்ட நாள் !

பல ஆளுமைகளின் திறமைசாலியான அகிலன் திருச்செல்வத்தின் கவிதைகள் அன்றைய காலகட்டத்தில் மட்டுமல்ல எக்காலத்திலும் தமிழரின் போரின் வலியை சுமந்த வரிகளாய் வரலாற்றின் பக்கங்களில் மையங்கொள்கிறது.

சோகத்தின் பாதைகளே
தேசத்தின் வரைபடமாய்
பரிணமித்தண .....
குருதியின் குருத்துக்கள்
விழியோரத்து சுவடுகளாய்
உறைந்தன...........
தினமும் துயரத்தின்
சிறகுகளால் துடைக்கப்பட்ட
நாட்கள்
இறந்து கொண்டிருந்தன..

கொந்தளிக்கும் கடலின் நடுவே இலங்கைத் தீவு. போர்ப் புயலின் நடுவே ஈழம். சுழன்றடிக்கும் புயலிலும், அலையோடு அலை மோதுவது போல் துக்க உணர்ச்சியிலும் கோப உணர்ச்சியிலும் போரிட எழுந்து நின்றனர். ஈழத்து கவிஞர்கள். அந்த இளைஞர்களின் அச்சமின் மைக்கும், தன்னம்பிக்கைக்கும் சான்றாக விளங்கும் கவிதைகளாக அகிலனின் வரிகள் சூளுரைக்கின்றன.

பிறந்து.........
வாழ்ந்து.......
எழுதப் படாத நிகழ்வாய்
பேசப்படாத மொழியாய்
மௌனமாய்........
இங்கு
இழப்பொன்று நிகழ்ந்தது.......
எதை இழந்தோம்
மண்ணை.....
மக்களை...
காற்றை.....
கடலலையை..,
மூச்சை..........
முழுவதையும் இழந்தோம்.....

தமிழ் வாலிபரை எதிர்கால அபாயமாக எண்ணி பேரினவாத ராணுவம் கொன்றொழித்த போதிலும், எதிரியின் பிணந்தின்னும் துப்பாக்கியைவிட வலிமை வாய்ந்ததாக எழுதுகோலை இயக்குகிறான் அகிலன்.

மக்களுக்காய் மரணிப்பதையிட்டு
நான் மகிழ்ச்சியடைகிறேன் ...
அதனால் என் துப்பாக்கி பறிபோவதையிட்டே
நான்வ ருத்தமடைகிறேன் ...,,
ஏனெனில் என் குழந்தைக்கு
அது மிகவும் அவசியம்....
நாம் எதை இழக்கவில்லை
நாம் எதை இழக்கவில்லை....

அகிலனின் கவிதை என்பது மிகவும் நுணுக்கமான ஒரு பொறி, அதன் உருவ அமைப்பு எளிமையாகத் தோன்றியபோதிலும், பலரை அவன் கவிதைகளில் ஈர்த்துள்ளது என்பதே உண்மை . அகிலனின் கவிதையின் அடிகள் ஒவ்வொன்றுமே வீரியம் மிக்கனவாய் அமைந்தன. சொல்லாட்சியும் படிம வார்ப்பும் அவன் கவிதையின் சக்திப் பயப்புக்கான மூலவளங்களாயின.

நம்மவர்கள் அகிம்சா வாதத்தில்
அரசமைப்பில் நம்பிக்கை
இழந்தனர்...
மானுட விடுதலைக்கு
தோள் கொடுத்தது
புரட்சிப் பூக்கள்...
துப்பாக்கிச் செடியில்
மாணவ பேரவை பூக்க..
காலமென்னும் காற்று
கைகொட்டி நின்றது..

சொல்லாட்சியையும், படிம வார்ப்பினையும் அகிலனின் வரிகளில் அவதானிக்கலாம். கவிதையின் கட்டமைப்புக்கு அமைவாக முன் அனுபவ வரலாற்று அறிவுத் தகவல்க ளையும் நாம் இங்கு காணலாம். அகிலனின் முதலாவது ஆண்டு நினைவாக ஈழத்தில் வெளி வந்த “மரணம் வாழ்வின் முடிவல்ல” என்ற கவிதைத் தொகுப்பானது எம் வாழ்வின் நிதர்சனத்தை மெய்ப்பிக்கும் கவிதைகளாகும் .

எண்பத்து மூன்றில்
திருநெல்வேலி மண்ணில்
சிதறின சதைகள்.........
தீவு எங்கும்
ஓடின குருதி...
தாலி இருந்து
தனயனை இழந்து
எம் தமிழ்ப் பெண்கள்
தன்னம்பிக்கை முதலாய்
தாய் நாடு அடைந்தனர்..,

மனம் கசியும் கண்ணீர்த்துளிகளே இவ்வரிகள். ஆனால் அதன் பின் எழுவது அபசுரமல்ல. “நமது தலைமுறை நிமிர்ந்து நிற்கட்டும்” என்று அறை கூவுகிறான் அந்தப் போராளிக் கவிஞனான அகிலன்.

தொடர்ந்து வரும்
சோகத்தின் பயணத்தில்
இறுதியில் இணைந்தது
இனிய வடமராட்சி...
மீன்கள் துள்ளும்
கடலலை ஓரம்.........
பேய்கள் குவியும்!
பிணங்களை உருட்டும்......!
அவற்றை........
தவறெனச் சொல்லும்!.........
மன்னிப்பும் கேட்கும்!.........
தேடுதல் வேட்டையின் பேரில்...
தேவைகளைத் தீர்த்துக் கொள்ளும்....
சோதனை என்னும் பெயரில்.........
பேண்களை சுவைத்துப் பார்க்கும்.......
சோகம் நிறைந்த
பாடங்கள் முடிவில்
மக்கள் என்றும்
வரலாறு படைப்பாளர்

1990 இல் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட “மரணம் வாழ்வின் முடிவல்ல” கவிதை தொகுப்பில் அடங்கிய அனைத்தும் எரிதழல் கவிதைகளாகும். படிப்பவர் நெஞ்சில் உணர்ச்சிப் புயலை எழுப்புகின்றன. ஈழத்தமிழரின் மானுட வாழ்வை ஒத்தையாய் தனித்து நின்று பார்க்காமல், போராடும் மக்கள் மத்தியில் நின்று, அவர்களின் துக்கங்களில் பங்கேற்று, அவர்களின் உறுதியும் தளராத நம்பிக்கை தரும் கவிதைகளாக ஒவ்வொரு வரியிலும் ஒளிர்கிறது.

ஆகாயம் பிளக்கும் வரை
மானுடர்கள் எழுவர்.........!
கொள்கையின் குன்றாய்
நிமிர்ந்து நிற்பர்........!
துன்பத்தின் சுவடுகளால்
துடைக்கப்பட்ட
ஓராண்டின் முடிவில்
உறுதி எடுத்துக்கொள்வோம் ...!
நிமிர்ந்து நிற்கட்டும்
நமது தலைமுறை ...

அள்ளி எரியும் நெருப்புப் புத்துணர்களின் மீதான வருடல் களின் நெருடலை உணர்ச்சியூட்டுகின்றது “மரணம் வாழ்வின் முடிவல்ல” அகிலனின் கவிதைத் தொகுப்பாக மிளிர்கின்றது.

பூச்செடியில் புதிதாய்
பூக்கும் பூக்களுக்காக
சிறகடிக்கத் தொடங்கிவிட்ட
இளம் பறவைகளின் ஒலிக்காக
எனை எதிர் கொண்டுவரும்
மரணத்திற்காக நம்பிக்கை யோடு
நான் காத்திருக்கிறேன்.
உண்மையை
மறுப்பவர்களிடம் கூறுங்கள்
என் மரணம்
என்றுமே ஒரு முடிவல்ல”

அகிலன் திருச்செல்வம் கூறிய கவிதை வரிகளைப் போல அவரின் இளம் வாழ்வும் ஈழ மண்ணுக்காக ஆகுதியாக்கப்பட்டுவிட்டது. அகிலன் கூறியது போல அவன் மரணம் வாழ்வின் முடிவல்ல!!

# மு.க. ஸ்டாலின்



(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மாநிலம் முழுவதும் ஒரு எதிர்ப்பலை உருவாகும் அளவுக்கு இந்த விவகாரத்திற்குக் கண்டனம் தெரிவித்தது.ஆனால், தற்போது சென்னையில் விக்னேஷ் என்ற இளைஞர் பொலிஸ் காவலிலும் திருவண் ணாமலையில் தங்கமணி என்பவர் சிறையில் நீதிமன்ற காவலில் இருந்தபோதும் இறந்த சம்பவங்களுக்கு பொலிஸ் விசாரணையின் போது நடந்த துன்புறுத்தலே காரணம் என்ற குற்றச்சாட்டு வலுத்துள்ளது. இந்த சந்தேக மரணங்களை மாநில அரசு கையாளும் விதம் விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கிறது. முதலமைச்சரின் பொறுப்பிலிருக்கும் காவல்துறை தொடர்ந்து இம்மாதிரி அத்துமீறல்களில் ஈடுபடுவதற்கு முதலமைச்சரே பொறுப்பேற்க வேண்டும் என்ற குரல்களும் ஒலிக்க ஆரம்பித்திருக்கின்றன.

**அரசியல் ரீதியான எதிர்ப்புகளை எப்படிக் கையாளப் போகிறது தி.மு.க?**

தற்போது தமிழ்நாடு சட்டப்பேரவையில் பிரதான எதிர்க்கட்சியாக அ.தி.மு.க. இருந்தாலும், தொடர்ந்து செய்திகளில் சலசலப்புகளை ஏற்படுத்துவதில் பாரதீய ஜனதா கட்சி முன்னிலை வகிக்கிறது. தொடர்ச்சியாக மதம் சார்ந்த விஷயங்களை முன்வைத்து அரசுக்கு நெருக்கடி கொடுப்பது, சில நாட்களுக்கு ஒரு முறையாவது அரசைப் பதில் சொல்ல வைக்கும் விதத்தில் விவகாரங்களை எழுப்புவது எனத் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது பா.ஜ.க.

இது தவிர, மாநில ஆளுநராக ஆர்.என். ரவி வந்த பிறகு, தி.மு.க. அரசு நிறைவேற்றிய பல மசோதாக்கள் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படாமல் நிற்கின்றன. மிகுந்த போராட்டத்திற்குப் பிறகு நீட் மசோதா மட்டும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில், எதிர்காலத்தில் பா.ஜ.கவையும் மாநில ஆளுநரையும் தி.மு.க. எப்படி சமாளிக்கவிருக்கிறது என்பது அரசுக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கும்.

**துரத்தும் வாக்குறுதிகள்**

தேர்தலுக்கு முன்பாக தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலும் லட்சிய ஆவணத்திலும் பல வாக்குறுதிகளை அளித்திருந்தது. குறிப்பாக, குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை, எரிவாயு சிலிண்டருக்கு 100 ரூபாய் குறைப்பது, பெட்ரோல் விலையில் 5 ரூபாயும் டீசல் விலையில் 4 ரூபாயும் குறைப்பது ஆகியவை இதில் முக்கியமானவையாக இருந்தன.

பெட்ரோல் விலையில் மூன்று ரூபாய் குறைக்கப்பட்டாலும் டீசல் விலை குறைப்பு, எரிவாயு மானியம் ஆகியவை குறித்து எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கேள்விகளை எழுப்பிவருகின்றன. இதில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் அளிப்பது என்பதை தனது பத்தாண்டுகால லட்சியத்தில் ஒரு பகுதியாக குறிப்பிட்டிருந்தாலும், அவை தி.மு.க. அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டிய வாக்குறுதியாகவே எதிர்க்கட்சிகளால் கேள்வி எழுப்பப்படுகின்றன.

இது தவிர, தமிழ்நாடு முதலமைச்சரின் மகனும் சேப்பாக்கம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான உதயநிதி ஸ்டாலினை கட்சிக்குள் அடுத்த வாரிசாக முன்னிறுத்த முதல்வர் முயல்கிறார் என்ற விமர்சனங்களும் உதயநிதி ஸ்டாலினின் சினிமா நிறுவனமான ரெட் ஜெயன்ட் மூவீஸ் தமிழில் வெளியாகும் பெரும்பாலான திரைப்படங்களை வெளியிடுவதும் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

இரண்டு உள்ளாட்சித் தேர்தல்கள், ஒரு நாடாளுமன்றத் தேர்தல், ஒரு சட்டமன்றத் தேர்தல் என தொடர்ச்சியாக நான்கு வெற்றிகளைப் பெற்றிருக்கிறது மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. கடைசியாக நடந்த ஊரக உள்ளாட்சித் தேர்தலில் அக்கட்சிக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியை இந்த ஆட்சியைக் குறித்த மக்களின் மதிப்பீடாகக் கொள்ள முடியும். ஆனால், பா.ஜ.க. கண்கொத்திப் பாம்பாகக் காத்திருக்கும் நிலையில், அடுத்த நான்காண்டுகளில் தி.மு.க. அரசு என்ன செய்யப் போகிறது என்பதில்தான் அக்கட்சியில் எதிர்காலம் இருக்கிறது.

# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**

**06)** **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07)** **பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் .......................................................................

ii) ...................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ............................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

**09)** **பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10)** **தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ...............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : ..................................................... (2 புள்ளிகள்)

**11)** **கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ........................... ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12)** **தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13)** **பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ............................................................................

ii) old / How / you? / are : ........................................................................... (2 புள்ளிகள்)

**14)** **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : .............................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

**15)** **பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : .........................................................................

ii) அங்கே பாருங்கள் : ......................................................................... (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)**

| | |
|---|---|
| 7 | 8 |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

.............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

...............................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

**கல்வி tv CHANNEL-1**

**10.05.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

**கல்வி tv CHANNEL - 2**

**10.05.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# தரம்-1 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு



மட்டக்களப்பு, மே. 10

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் காத்தான்குடி ஹிழுறிய்யா வித்தியாலத்தின் 2022 ஆம் வருடத்துக்கான முதலாம் தரத்துக்கு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எஸ்.ஐ. யாசீர் அரபாத் தலைமையில் நேற்று இடம் பெற்றது

நிகழ்வில் சட்டத்தரணி எஸ்.எச்.எம். ரிஸ்வி , மட்டக்களப்பு 38 ஆவது மாணவர் சிப்பாய் படையணியின் கட்டளை அதிகாரி லெப்டினண்ட் கேணல் ஜீ.டப்ளியூ.ஜீ.எச்.நிலந்த, பொறியியலாளர் ஏ.எல்.எம். ரிஸாத் உட் பட பலரும் கலந்து கொண்டனர்

இதன் போது தரம் ஒன்று மாணவர்கள் வரவேற்கப்பட்டதுடன் மாணவர்களுக்கான ஆரம்ப கல்வி தொடக்கி வைக்கப்பட்டது.

நிகழ்வின்போது அஷ்ஷெய்க் எ.அக்ரம் நழீமி சிறப்புரை நிகழ்த்தினார். (அ)

# தெய்வம் நின்றறுக்கும் என்பார்கள் அதுவே இந்த நாட்டில் நடக்கின்றது

## கலையரசன் எம்.பி. கூறுகிறார்

**அக்கரைப்பற்று, மே. 10**

**மனிதன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும் என்று சொல்லுவார்கள். அதுதான் இந்த நாட்டிலே இன்று நடந்துகொண்டிருக்கின்றது. தமிழர்களுக்கு இளைத்த வினை இந்த நாட்டின் தலைவர் இன்று நிம்மதியாக வாழ முடியாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.**

அக்கரைப்பற்று கோளாவில் அறுத்த நாக்கொட்டீஸ்வரர் கூட்டுப் பிரார்த்தனை சபையின் ஓராண்டு நிறைவு விழாவில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது சமூகத்திலே ஆன்மீகக் கருத்துக்களை எடுத்துச் செல்லக்கூடிய இளைஞர்கள் மிகவும் குறைவாக இருக்கின்ற காலகட்டத்தில் கோளாவில் பிரதேசத்தில் எமது இனம், மதம், சமூகத்திற்காக முன்நின்று உழைக்கும் இளைஞர்களைப் பார்த்து மிகவும் சந்தோசமடைகின்றேன். நிச்சயமாக இந்த இளைஞர்கள் எதிர் காலத்தில் நல்ல தலைவர்களாக எமது சமூகத்தை வழிநடத்துவார்கள்.

எங்களுடைய மக்கள் நீண்ட காலமாக போராடி இனரீதியாக அழக்கப்பட்டு, மீள்குடியேற்றங்கள் இல்லாமல், ஜனநாயகம், நீதி என்பன இல்லாமல் இருந்த காலங்களையெல்லாம் நாங்கள் எண்ணிப் பார்க்கின்றோம்.

மனிதன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும் என்று சொல்லுவார்கள் அதுதான் இந்த நாட்டிலே இன்று நடந்துகொண்டிருக்கின்றது. எங்களுக்கிளைத்த வினை இந்தா நாட்டின் தலைவர் இன்று நிம்மதியாக வாழ முடியாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது.



எனவே, இந்த நாடு ஒரு நல்ல நிலைக்கு வர வேண்டும். அதற்கு மூவின மக்களும் ஒன்றுபட வேண்டும். அந்த ஒற்றுமையின் மூலம் இந்த நாட்டின் தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகி ஒரு பொதுவான ஆட்சி உருவாக்கப்படுகின்ற போதுதான் இந்த நாட்டின் பெருளாதாரம் மேலோங்கி வரும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை-என்றார். (அ)

# அவசரகால சட்டத்தை நீக்குமாறு தீப்பந்தங்கள் ஏந்தி போராட்டம்!



திருமலை, மே. 10

நாட்டில் நடைமுறைப்படுத்தபட்ட அவசரகாலச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டமானது திருகோணமலை பிரதான கடற்கரைக்கு முன்பாக அமைந்துள்ள காந்தி சுற்று வட்டத்திற்கு முன்பாக தமித் தேசிய மக்கள் முன்னணியினால் மேற்கொள்ளப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் போது "அவசரகாலச் சட்டத்தை உடன் நீக்கு ஒடுக்குமுறையை உடன் நிறுத்து" எனும் தொனிப் பொருளில் தீப்பந்தம் ஏற்றியவாறு அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (அ)

# அட்டாளைச்சேனை மாணவருக்கு இரண்டாவது பைஸர் நேற்று முதல்

மட்டக்களப்பு, மே. 10

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கொவிட்-19 இரண்டாவது பைஸசர் தடுப்பூசி நேற்று முதல் ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி ஏ. எம்.இஸ்மாயில் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் மற்றும் தீகவாபி ஆகிய பிரதேசங்களிலுள்ள சகல பாடசாலைளிலும் 12 தொடக்கம் 16 வயது வரையிலான முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு இரண்டாவது பைஸசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று முதல் வெள்ளிக்கிழமை வரை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதேவேளை, கோவிட்-19 மூன்றாவது தடுப்பூசி பெற்ற 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 04ஆவது பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக் கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் சுகாதார வைத்தியதிகாரி காரியாலயத்துடன் தொடர்புகொண்டு தத்தமது பிரிவுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடுப்பூசி ஏற்றும் நிலையங்களுக்குச் சென்று தங்களுக்கான 04ஆவது தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ)

# பெண் தலைமை குடும்பங்களை வலுவூட்டும் நிகழ்ச்சி அம்பாறையில்

அம்பாறை, மே. 10

பெண்களை சமூக மற்றும் பொருளாதார ரீதியாக வலுவூட்டும் நோக்கில் தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்தி வரும் திரியமங்பெத்த நிகழ்ச்சித்திட்டமானது அம்பாறை மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் பிரிவின் பங்கேற்போடு மாவட்டம் முழுவதும் இடம்பெற்று வருகின்றது.

இத்தொடரில், திரியமங்பெத்த நிகழ்ச்சித் திட்டமானது இறக்காமம் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களை பொருளாதார ரீதியாக அவர்களின் சுயதொழில் முயற்சி களை ஊக்குவித்து மேலும் வலுவூட்டு வதன் மூலம் நிலை பேறான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு அவர்களுக்குத் தேவையான கணக்கீட்டு முறைகள், நாளாந்த கணக்கீட்டு பதிவேட்டு முறைகள், வருமானத்தை கூட்டுவதற்கான வியாபார உக்திகள் தொடர்பில் ஒரு நாள் செயலமர்வாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.



இச்செயலமர்விற்கு வளவாளர்களாக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. சுரேக்கா மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவு மாவட்ட உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஆர். றிஸ்வானுல் ஜன்னாஹ், பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் ஆர்.எஸ். றிம்ஸியா ஜஹான், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.சபறுல் ஹஸீனா, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. றிஷாட் ஆகியோர் கலந்துகொண்டு செயலமர்வை நடத்தினர். (அ)

# கனடியப் பிரதமர் ட்ரூடோ; உக்ரைனுக்கு திடீர் விஜயம்

கீவ், மே 10

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போருக்கு மத்தியில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ நேற்று உக்ரைனுக்கு திடீர் விஜயம் செய்து உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை சந்தித்துப் பேசினார்.

இந்த பயணத்தில், ட்ரூடோவுடன் கனடா துணைப் பிரதமர் கிறிஸ்டியா ப்ரீலாண்ட் மற்றும் வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி ஆகியோரும் இணைந்திருந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை உக்ரைன் வந்திறங்கிய இவர்கள், ரஷ்ய படைகளின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட தலைநகர் கீவின் புறநகரப் பகுதிகளில் ஏற்பட்ட அழிவுகளைப் பார்வையிட்டனர்.

ரஷ்யாவை எதிர்த்துப் போராடி வரும் உக்ரேனியர்களுக்கு கனடாவின் ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் பயணம் அமைந்திருந்தது.

வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் இணைந்து கூட்டாக செய்தியாளர்களை சந்தித்த கனடியப் பிரதமர் ட்ரூடோ, உக்ரைனுக்கு ட்ரோன் கமராக்கள், செயற்கைக்கோள் தொழில்நுட்ப உதவி, சிறிய ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு நிதி உதவி உள்ளிட்ட அதிக இராணுவ உதவிகளை கனடா வழங்கும் என்று கூறினார்.

பீரங்கிகளை உக்ரைனுக்கு அனுப்பவுள்ளதாக ட்ரூடோ கூறிய இரண்டு வாரங்களுக்குப் பிறகு இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.



இவற்றுடன் உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவுக்கு உதவும் 40 ரஷ்யர்கள் மற்றும் ஐந்து நிறுவனங்கள்மீது புதிய தடைகளை கனடா பிரதமர் அறிவித்தார். இவர்களில் தன்னார்வக் குழுக்கள், ரஷ்யா பாதுகாப்புத் துறையின் நெருங்கிய கூட்டாளிகள் அடங்குவர்.

கொடூரமான போர்க் குற்றங்களை உக்ரைனில் விளாடிமிர் புடின் நிகழ்த்தியுள்ளார். இவற்றுக்கு அவர் பொறுப்புக் கூற வேண்டும். உக்ரேனியர்களைப் படுகொலை செய்வதுடன், அவர்களை மிருகத்தனமாக புடின் படைகள் நடத்துகின்றன. இந்நிலையில் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக நின்று, நீதி கோரிப் போராடும் உக்ரைனியர்களுக்கு கனடா முழுமையாக ஆதரவளிக்கும் எனவும் ட்ரூடோ உறுதியளித்தார்

அதற்கு மேல், உக்ரைனில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் உலக உணவுத் திட்டத்தின் முயற்சிகளுக்கு உதவும் வகையில் 25 மில்லியன் டொலர்களை கனடா வழங்கும். உக்ரேனில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

உக்ரைன் தலைநகர் கிய்வில் கனேடிய தூதரகத்தை மீண்டும் திறப்பதாகவும் ட்ரூடோ கூறினார். இதனைக் குறிக்கும் வகையில் கனடா துணைப் பிரதமர் கிறிஸ்டியா ப்ரீலாண்ட், வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி மற்றும் உக்ரைனுக்கான கனேடிய தூதர் லாரிசா கலாட்சா ஆகியோருடன் இணைந்து தூதரகத்தில் கனடியக் கொடியை ஏற்றிவைக்கும் நிகழ்விலும் பிரதமர் ட்ரூடோ பங்கேற்றார்.

இதேவேளை, கனடாவின் உதவிகளுக்காக பிரதமர் ட்ரூடோவிற்கு உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி நன்றி தெரிவித்தார். எதிர்பார்த்ததை விட அதிகமான உதவிகளை உக்ரைனுக்கு கனடா செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)



## போர் நடக்கும் உக்ரைனுக்கு ஜில் பைடனும் திடீர் விஜயம்!

கீவ், மே 10

திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மனைவி ஜில் படைன் உக்ரைனுக்கு சென்றார்.

உக்ரைன்மீது ரஷ்யா தொடுத்துள்ள போர் 10 வாரங்களை கடந்துள்ளது. உக்ரைன் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யா, பல முக்கிய நகரங்களை கைப்பற்றியுள்ளதாகக் கூறி வருகிறது.

தற்போது உக்ரேனின் கிழக்கு நகரங்களை குறிவைத்து தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகிறது. ரஷ்யா - உக்ரைன் போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஆதரவுக்கரம் நீட்டி வருகின்றன.

இத்தகைய சூழலில், திடீர் பயணமாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மனைவி ஜில் படைன், உக்ரைனுக்கு சென்றுள்ளார்.

உக்ரைனின் உஹோரோடா நகரத்தில், உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் மனைவி ஒலேனே ஜெலன்ஸ்கியை ஜில் பைடன் சந்தித்தார். ஒரு சிறிய வகுப்பறையில் இருவரும் நேர் எதிரே அமர்ந்தபடி சிறிது நேரம் பேசினர். பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்கையில்,

“இந்த போர் நிறுத்தப்பட வேண்டியது அவசியம் என்பதை உக்ரைன் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டியுள்ளது. இந்த போர் கொடூரமானது. ஐக்கிய நாடுகளின் உறுப்பினர்கள் உக்ரைன் மக்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும்” என்றனர். (ஐ)



## 10 இலட்சம் சிரிய அகதிகளை திருப்பியனுப்புகிறது துருக்கி!

இஸ்தான்புல், மே 10

சிரியாவில் 2011 ஆம் ஆண்டு முதல் ஐ. எஸ். பயங்கரவாத எழுச்சி மற்றும் அரசுக்கு எதிரான கிளர்ச்சிப் படைகளின் ஆதிக்கம் அதிகரித்தது. இதனால், சிரியாவில் உள்நாட்டு போர் ஏற்பட்டது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

இதனிடையே, சிரியாவில் உள்நாட்டு போர் தொடங்கியது முதல் இலட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்பு தேடி அயல் நாடுகளில் தஞ்சமடைந்தனர்.

அயல்நாடான துருக்கியில் மட்டும் 37 இலட்சத்துக்கும் மேற்பட்ட சிரிய அகதிகள் அடைக்கலம் தேடியுள்ளனர்.

இந்நிலையில், துருக்கியின் பொருளாதாரம், கலாசாரம், பண்பாடு, மொழி, பழக்கவழக்கம் என அனைத்திலும் சிரிய அகதிகள் ஆக்கிரமித்து அழிக்கின்றனர் என்று கூறி அவர்களுக்கு எதிராக வெறுப்புணர்வும் அதனால் அகதிகள் மீதான தாக்குதல்களும் துருக்கியில் அதிகரித்துள்ளன.

இதையடுத்து, சிரிய அகதிகளை மீண்டும் அவர்களின் நாட்டுக்கே அனுப்பும் நடவடிக்கைகளை ஜனாதிபதி எர்டோகன் முன்னெடுத்துள்ளார். ஏற்கனவே 5 இலட்சம் அகதிகள் சிரியாவுக்கு அனுப்பப்பட்ட நிலையில், தற்போது 10 இலட்சம் சிரிய அகதிகளை திருப்பியனுப்பும் நடவடிக்கைகளை துருக்கி அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது. (ஐ)

# தலிபான்களின் அறிவிப்பு அதிர்ச்சி அளிக்கின்றது!

நியூயோர்க், மே 10

பெண்கள் முகத்தை மறைக்க வேண்டும் என்ற தலிபான்களின் உத்தரவு அதிர்ச்சியளிப்பதாக ஐ. நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெரஸ் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் வீட்டைவிட்டு பெண்கள் வெளியே வரும்போது, உடலை முழுவதும் மூடக்கூடிய நீலநிற புர்கா அணிந்தே வரவேண்டும். அவ்வாறு முகத்தை மறைக்காமல் வரும் பெண்களின் தந்தை அல்லது நெருங்கிய ஆண் உறவினர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள். அரசாங்க வேலையில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று தலிபான் அரசின் தலைவரான ஹிபத்துல்லா அகுந்த்ஸாடா தெரிவித்துள்ளார்.

தலிபான்களின் இந்த உத்தரவுக்கு சர்வதேச அளவில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இந்த

ஐ. நா. பொதுச் செயலர்



நிலையில் இதற்கு ஐக்கிய நாடுகள் சபையும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ. நா. பொதுச் செயலாளர் ருவிட்டர் பக்கத்தில்," ஆப்கானிய பெண்கள், சிறுமிகளுக்கு தலிபான்கள் அளித்த வாக்குறுதிகளையும், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் உங்கள் கடமைகளையும் நீங்கள் காப்பாற்ற வேண்டும். பெண்கள் பொது இடங்களில் முகத்தை மறைக்க வேண்டும் என்றும், அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டும் வீட்டை விட்டு வெளியே வர வேண்டும் என்றும் தலிபான்கள் அறிவித்திருப்பது எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆப்கானிஸ்தான் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அளித்த வாக்குறுதிகளையும், சர்வதேச மனித உரிமைச் சட்டத்தின் கீழ் தலிபான்கள் தங்கள் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்று நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறேன்" என்று தெரிவித்துள்ளார். (ஐ)



# மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் 19 வயது அல்கர்ஸ் சம்பியன்

மட்ரிட், மே 10

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸின் ஆடவருக்கான சம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ளார் 19 வயதேயான இளம்வீரர் கார்லோஸ் அல்கர்ஸ்.

தொழில்முறை ரீதியான ரென்னிஸ் வீரர்கள் பங்கேற்ற களிமண் ஆடுகளமான மட்ரிட் ஓப்பன் தொடரின் இறுதியாட்டம் ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

இதில் ஸ்பெயின் நாட்டவரான கார்லோஸ் அல்கர்ஸ், ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வேரவை எதிர்கொண்டார். இந்தப் போட்டியில் 6-3, 6-1 என்ற கணக்கில் அல்கர்ஸ் வெற்றி பெற்றார்.

முன்னதாக அல்கர்ஸ், ரென்னிஸ் உலகின் ஜாம்பவான்களான ரபேல் நடாலை காலிறுதியிலும், ஜொகோவிச்சை அரையிறுதியிலும் வீழ்த்தி அனைவரின் கவனத்தையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# டில்லியை 91 ஓட்டங்களால் பந்தாடியது சென்னை அணி!

மும்பை, மே 10

டில்லி கப்பிட்டல்ஸ் அணியை 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 55ஆவது லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் விளையாடின.

நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணியின் தலைவர் ரிஷப் பந்த், களத்தடுப்பைத் தெரிவு செய்தார். இதனால், சென்னை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

20 ஓவர்கள் முடிவில் ஆறு விக்கெட்களை இழந்தது 208 ஓட்டங்கள் எடுத்தது சென்னை. 209 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை விரட்டியது டில்லி அணி.

அந்த அணிக்காக டேவிட் வோர்ணர் மற்றும் கே. எஸ். பரத் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினர். இரண்டாவது ஓவரில் சிமர்ஜித் சிங் வேகத்தில் விக்கெட்டை இழந்தார் பரத். இருந்தாலும் அந்த அணிக்காகத் துடுப்பாட்டத்தில் அசத்தி வந்த வோர்ணர், 12 பந்துகளில் 19 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் தீக்ஷனவின் பந்தில் விக்கெட்டை இழந்தார்.

தொடர்ந்து ரிஷப் பந்த் மற்றும் மிற்செல் மார்ஷ், ஒரு சிறிய இணைப்பாட்டத்தை அமைத்தனர். இருந்தும் மொயின் அலியின் பந்துவீச்சில் விக்கெட்டை இழந்தார் மார்ஷ். பின்னர் சீரான இடைவெளியில் வரிசையாக விக்கெட்களை இழந்தது டில்லி. பந்த், ரிபல் படேல், அக்சர் பட்டேல், பவல், குல்தீப் யாதவ், ஷர்துல் தாகூர் மற்றும் கலீல் அகமது ஆகியோர் ஆட்டமிழந்தனர்.



17.4 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 117 ஓட்டங்களை எடுத்தது. டில்லி. இதனால், சென்னை அணி 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


முன்னதாக சென்னை அணிக்காக தொடக்கம் கொடுத்த டெவன் கொன்வே, ருதுராஜ் இணை முதல் விக்கெட்டுக்காக 110 ஓட்டங்கள் சேர்த்தனர். ருதுராஜ் 41 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஷிவம் துபே கொன்வேயுடன் இணைந்து 59 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் ஏற்படுத்தப்பட்டது.

கொன்வே 87 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலும், துபே 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

ராயுடு, மொயின் அலி மற்றும் உத்தப்பா ஆகியோர் ஓரிழக்கங்களில் ஆட்டமிழந்தனர். சென்னை அணியின் தலைவர் டோனி 8 பந்துகளில் 21 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இந்த போட்டியில் ஆட்ட நாயகன் விருதை வென்றார் டெவன் கொன்வே.

முன்னதாக, இந்தப் போட்டி நடைபெறுவதில் சிக்கல் இருந்தது. ஏனெனில், டில்லி அணியில் சிலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்த காரணத்தால் அந்த அணி தனிமைப்படுத்தப்பட்டு இருந்தது. தொற்று பாதிப்பு ஏதும் இல்லை என்பது உறுதியான பிறகே போட்டி நடந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# கார்த்திக்கு ஆட்டத்துக்கு தலைவணங்கிய கோலி!

மும்பை, மே 10

பெங்களூர் அணிக்காக அதிரடியாக ஆடி 8 பந்துகளில் 30 ஓட்டங்களை குவித்த தினேஷ் கார்த்திக் முன்பாக தலை வணங்கினார் விராட் கோலி.

நேற்று முன்தினம் நடந்த ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் பெங்களூர் அணி 192 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் தினேஷ் கார்த்திக் வெறும் 8 பந்துகளில் 30 ஓட்டங்களை குவித்தார். 4 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் அவர் இந்த ஓட்டங்களைக் குவித்திருந்தார். கடைசி 4 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், ஒரு பௌண்ட்ரியை அவர் விளாசியிருந்தார்.

ஆட்டம் முடிந்து வீரர்கள் இருப்பிடத்துக்கு திரும்பிய தினேஷ் கார்த்திக் முன்பாக வந்த விராட் கோலி அவரை தலை வணங்கி பாராட்டினார். ஏனைய வீரர்களும் பயிற்றுவிப்பாளரும் கார்த்திக்கை பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மூன்றாவது முறையாக “டக் அவுட்” ஆன கோலி!

மும்பை, மே 10

ஐ. பி. எல். நடப்பு தொடரில் மூன்றாவது முறையாக முதல் பந்திலேயே டக் - அவுட் ஆகியுள்ளார் பெங்களூர் வீரர் விராட் கோலி.

கிரிக்கெட் உலகில் ஓட்ட இயந்திரம் என்று வர்ணிக்கப்படுபவர் விராட் கோலி. சகல வகை கிரிக்கெட் போட்டியிலும் இவர் 23,650 ஓட்டங்களை குவித்துள்ளார்.

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் அனைத்து தொடர்களையும் சேர்த்து 6,499 ஓட்டங்களை பதிவு செய்துள்ளார். இது தனியொரு வீரர் பதிவு செய்துள்ள அதிகபட்ச ஓட்டம் இதுவேயாகும்.

இப்படி பல சாதனைகளுக்கு சொந்தக்காரர் விராட் கோலி. இருந்தாலும் நடப்பு தொடரில் ஓட்டங்களை எடுக்க சிரமப்படுகிறார் அவர். மொத்தம் 12 போட்டிகளில் 216 ஓட்டங்களை



மட்டுமே சேர்த்துள்ளார் கோலி. ஒரேயோர் அரைச்சதம் மட்டுமே இதில் பதிவு செய் துள்ளார். ஆறு முறை ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்துள்ளார்.

இதில் மூன்று போட்டிகளில் அவர் எதிர்கொண்ட முதல் பந்திலேயே ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்துள்ளார். அவர் மிகவும் அரிதாகவே டக் அவுட் ஆவார். இந்நிலையில், இம்முறை 3 முறை டக் அவுட் ஆகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரசாங்கத்தின் குண்டர்களினால் தாக்கப்பட்ட போராட்டக்காரர்கள்

## மஹிந்தவை சாடினார் சங்கக்கார

கொழும்பு, மே 10

**பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் இன்று கொழும்பில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியமைக்கு இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

மஹிந்தவின் ஆதரவாளர்கள் அலரிமாளிகைக்கு முன்னால் இருந்த மைனா கோ கமா மற்றும் காலி முகத்திடலில் உள்ள கோட்டா கோ கம ஆகிய இரண்டு போராட்டத் தளங்களையும் அடித்து நொருக்கி தீயிட்டனர்.

இந்த சம்பவத்தை கண்டித்து, ருவிட்டரில் கருத்து



வெளியிட்டுள்ள குமார் சங்கக்கார, அமைதியான போராட்டக்காரர்கள் அரசாங்கத்தின் குண்டர்களால் தாக்கப்பட்டனர் என கடுமையாக சாடியுள்ளார்.

நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொது மக்களிடம் விடுத்த வேண்டுகோளுக்கு கண்டனம் வெளியிட்ட அவர் இதனைக் கூறியுள்ளார். (அ)



# மஹிந்த ஆதரவாளர்கள் வந்த பஸ்கள் மீதும் கடும் தாக்குதல்!

கொழும்பு, மே 10

அலரிமாளிகைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்களை இன்று ஏற்றிவந்த பஸ்கள் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அலரிமாளிகைக்கு முன்பாகவும், காலி முகத்திடலில் அமைதியான முறையில் போராட்டம் நடத்தியவர்கள் மீது பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தினர்.

இந்த சம்பவம் நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தியதால், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நாடளாவிய ரீதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களை கொழும்புக்கு ஏற்றிச் சென்ற பல பஸ்துகள் நகரை விட்டு வெளியேற முற்பட்டபோது பொதுமக்களால் தாக்கப்பட்டுள்ளன.(அ)

# ராஜபக்ஷக்களின் யுகம் முடிவுக்கு வரும்

## சனத் ஜனசூரிய கண்டனம்

கொழும்பு, மே 10

ராஜபக்ஷக்களின் யுகம் இதோடு நிறைவுக்கு வருமென தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜயசூரிய, சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்கும் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் ருவிட் செய்துள்ள சனத்,

கோட்டா கோ கம, மைனா கோ கம ஆகிய இடங்களில் அமைதியான முறையில் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் மீது குண்டர்கள் களமிறக்கப்பட்டு தாக்கப்படுவார்கள் என நான் ஒருபோதும் நினைக்கவில்லை. போராட்டக்காரர்கள் மக்களுக்காகவே போராடுகிறார்கள். மாறாக ஊழல் அரசியல்வாதிகளைப் பாதுகாக்க அவர்கள் போராட வில்லை என்பதை பொலிஸார் நினைவில் கொள்ள வேண்டும். ராஜபக்கசக்களின் யுகம் இதோடு முடிவுக்கு வரும் என தெரிவித்துள்ளார். (அ)

# இராணுவம் களமிறக்கப்பட்டது ஏன்?

கொழும்பு, மே 10

காலி முகத்திடலில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கும் அனைத்து பொதுமக்களை பாதுகாப்பதற்கும் பொலிஸாருக்கு உதவுவதற்காக இலங்கை இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

காலிமுகத்திடலில் அரச ஆதரவாளர்களுக்கும், அரச எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட பெரும் மோதலை கட்டுப்படுத்த பொலிஸ், அதிரடிப்படைக்கு மேலாக இராணுவம் வரவழைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

**ஆண்டுகள் எத்தனை ஆயினும்**
**நினைவும் நீயே! நிழலும் நீயே!**

தனயனாக
05-05-1970



தந்தைக்காக
10-05-1989

**செல்வன் எஸ். தி. அகிலன்**
யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவன்
கல்லூரி கிரிக்கெட் அணித் தலைவன்; விளையாட்டு வீரன்

நினைவுநாள் ஒருநாளா இல்லை இல்லை
நினைப்பதற்கு மறந்ததொரு கணமும் இல்லை !
மனையருகில் மடிமீதில் படிக்கும் நூலில்
மகனேநீ தெரிகின்றாய் எதிலும் எங்கும் !
அனைவரதும் உறவுகளும் அகன்று போகும்
அமைதிமிகு இரவுகளில் அழகாய் வந்து
அருகமர்ந்து பேசுகிறாய் விடியும் மட்டும் !
தோன்றுகின்றாய் கண்களில் துன்பம் தீர
இணைபிரியா துணையான மகனே எங்கள்
இதயமதை ஆளுகின்ற அரசன் நீயே !
எந்நாளும் எவ்விடமும் என்றும் எம்முள்
நினைவாயும் நிழலாயும் வாழ்பவன் நீயே !

அம்மா, அப்பா
குடும்ப உறவினர்கள், நண்பர்கள்
416.920.9250

# பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வரை பாராளுமன்ற அமர்வுகள் வேண்டாம்

## தயாசிறி ஜயசேகர கூறுகிறார்

கொழும்பு, மே 10

நாட்டிலுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வரை பாராளுமன்ற அமர்வுகளை நடத்தாமலிருப்பதே சிறந்தது. கடந்த வாரம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் பிரச்னைகளுக்கு எவ்வித தீர்வும் காணப்படவில்லை. எனவே இவ்வாறு அமர்வுகளை நடத்துவதும் மக்களின் பணத்தை வீண் விரயமாக்கும் செயற்பாடாகும் என்று சிறீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சு.க. தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

நாட்டிலுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்காகவே கடந்த வாரம் பாராளுமன்றம் கூட்டப்பட்டது. எனினும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முரண்பட்டுக் கொண்டனரே தவிர பிரச்னைகளுக்கு எவ்வித தீர்வும்



காணப்படவில்லை.

இவ்வாறு எவ்வித பிரயோசனமும் இன்றி பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறுமாயின் மக்களின் கோபம் மேலும் தீவிரமடையும்.

எனவே அவர்களின் பணத்தை தொடர்ந்தும் வீண் விரயம் செய்யாது பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வரையில் பாராளுமன்ற அமர்வுகளை நடத்தாமல் இருப்பதே சிறந்தது.

பிரதமர் பதவி விலக மறுக்கும் பட்சத்தில் அவரை பதவி விலக்கும் அதிகாரம் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதிக்கு காணப்படுகிறது.

எனவே அவர் நினைத்தால் பிரதமரை பதவி விலக்க முடியும்.

அவ்வாறன்றி குடும்ப பிரச்னைகளுக்காக எந்தவொரு முடிவும் எடுக்கப்படாமலிருந்தால் அதனால் நாட்டுக்கு எவ்வித பயனும் இல்லை.

மேலும் 21 ஆவது அரசியலமைப்பு திருத்தம் விரைவாக சமர்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். இதன் ஊடாக ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரத்தை முற்றாகக் குறைத்து சர்வ கட்சி உறுப்பினர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய சபையின் ஆலோசனைக்கு அமைய செயல்படும் நிலைக்கு தள்ள வேண்டும்.

அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பது மிகக் கடினமாகும்.

இவற்றுக்கு அப்பால் பிரதமர் பதவி விலகி , அந்த பதவிக்கு மீண்டும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படுவாராயின் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்கு நாம் ஒருபோதும் ஆதரவளிக்க மாட்டோம்-என்றார். (அ)

## அரச....

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பாது காப்போம் என்ற கோஷத்துடன் அலரி மாளிகை முன்பாகக்கூடிய நான்காயிரத் துக்கும் மேற்பட்டவர்களே இந்த வன் முறையை ஏற்படுத்தினர் என்று போராட்ட ஏற்பாட்டுக் குழு சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளது.

அரச தரப்பு ஆதரவாளர்கள் காலி முகத்திடலுக்கு செல்வதைத் தடுக்கப் பொலிஸார் தவறியிருந்தனர். பொல்லு கள், தடிகளுடன் நுழைந்த அவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டி தாக்கி னர். அத்துடன், அங்கிருந்த பந்தல்களை யும் அடித்து நொறுக்கி தீயிட்டு எரித்த னர். இதன்பின்னர், கலவரத்தைக் கட்டுப் படுத்த பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியதுடன், தண்ணீரைப் பீய்ச்சியடித்தும் கலைக்க முயன்றனர். இதைத் தொடர்ந்து ஊரடங்கு உத்தர வையும் பிரகடனப்படுத்தினர்.

இந்நிலையில், காலிமுகத்திடல் ஹோட்டல் சந்திக்கு அருகே தங்கியி ருந்த அரச ஆதரவாளர்களுக்கும் காலி முகத்திடல் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் நிகழாமல் தடுக்க விசேட அதிரடிப் படையினரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர். அவர்கள் மனித சங்கிலி வடிவில் நின்று மோதலைத் தடுக்க முனைந்தனர். எனி னும், அதையும் மீறி தாக்குதல்கள் இடம் பெற்றன.

காலிமுகத்திடலில் ஏற்படுத்தப்பட்ட வன்முறையைத் தொடர்ந்து போராட் டக்காரர்கள் பதிலுக்கு அரச ஆதரவாளர் களையும், அவர்களை ஏற்றிவந்த பேருந்து களையும் அடித்து நொறுக்கினர். இந்த வன்முறை கொழும்பில் பல இடங்களுக் கும் பரவியிருந்தது. இந்த வன்முறை களில் பலர் காயமடைந்தனர்.

காலிமுகத்திடல் போராட்டக் காரர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையைத் தொடர்ந்து சட்டத் தரணிகள், சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோர் காலிமுகத்திடலில் கூடினர். இதேசமயம், இந்தக் கலவரத்தை கண் டித்து நாடளாவிய ரீதியில் பேரணிகள், கவனவீர்ப்பு போராட்டங்களையும் அவர்கள் முன்னெடுத்தனர்.

காலிமுகத்திடலில் ஏற்படுத்தப்பட்ட வன்முறையை தொடர்ந்து தென்னிலங் கையின் பல்வேறு இடங்களிலும் கலவரங்கள் பரவியிருந்தன. இதனால் தென்னிலங்கை முழுவதும் பதற்றம் பரவியிருந்தது. (ஐ)

## பிரதமர்...

மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலான அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி காலி முகத்திடல் வளா கத்திலும், அலரிமாளிகைக்கு முன்பாக வும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது, ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் நேற்று தாக்குதல் நடத்தினர்.

போராட்டக்களங்களில் அமைக் கப்பட்டிருந்த கூடாரங்களை அடித்து நொருக்கி, தீயிட்டுக் கொளுத்தினர். இதனால் போராட்டக்களம் கலவர பூமியாக மாறியது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து அலரிமாளிகை முன்பாக நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்ற ஆளுங்கட்சி ஆதரவாளர்களே தாக்குதலை நடத்தினர் என போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

அறவழி போராட்டக்காரர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட கொலைவெறித் தாக்குதலைக் கண்டித்து, நாட்டில் பல பகுதிகளிலும் மக்கள் வீதிக்கு இறங்கிய தால், உடன் அமுலுக்கு வரும் வகையில் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

இவ்வாறு முழு நாடும் கொந்தளித்தி ருக்கும் நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியுள்ளார். நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவமானது, அவரின் அரசியல் வாழ்வில் மற்றுமொரு கரும்புள்ளியாக அமைந்துவிட்டது என அவருக்கு நெருக்கமானவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (அ)

## ராஜபக்ஷக்களின்...

சந்தியில் அமைக்கப்பட்டிருந்த முன் னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஆட்சியாளர்களின் தந்தையுமான டி. ஏ. ராஜபக்ஷவின் சிலையும் இடிக்கப்பட் டது. அத்துடன், ராஜபக்ஷ தம்பதியரின் நினைவுச் சின்னங்கள் வைக்கப்பட்டி ருந்த நூதனசாலையும் அடித்து நொருக் கப்பட்டு தீவைக்கப்பட்டது.

இதேசமயம், நேற்றிரவு மஹிந்த ராஜ பக்ஷவுக்கு சொந்தமான குருநாகல் வீடும் ஆர்ப்பாட்டக்காரர்களால் தீக்கிரை யாக்கப்பட்டது. (ஐ)

## அமைச்சர்கள்...

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, திஸ்ஸ குட்டி ஆராச்சி ஆகியோரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

இதேபோல், வடமத்திய மாகாண முத லமைச்சர் மஹிபால ஹேரத் மற்றும் அவ ரது மகன் அமைச்சர் கனக ஹேரத்தின் வீடுகள் எரிக்கப்பட்டன. மொறட்டுவை மேயர் சமன் லால் பெர்னாண்டோவின் இல்லம் அடித்து நொறுக்கப்பட்டது.

## நாடு....

படுத்தப்பட்டது.

இதன்படி, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் வழங்கப்பட்ட எழுத்து பூர்வ அனுமதியின் அதிகாரத்தின் கீழ் தவிர, அந்த பகுதிகளில் உள்ள பொதுச் சாலை, புகையிரதப் பாதை, பொதுப் பூங்கா, பொது விளையாட்டு மைதானம் அல்லது கடற்கரையில் யாரும் தங்குவ தற்கு அனுமதி இல்லை என்றும் தெரி விக்கப்பட்டது. (ஐ)

## மோதலில்...

ஈடுபட்ட அனைவரையும் அரசியல் கட்சி வேறுபாடின்றி கைது செய்யுமா றும், மோதல்களைக் கட்டுப்படுத்துவ தற்கு தேவையான அனைத்து நடவடிக் கைகளையும் உடனடியாக மேற்கொள் ளுமாறும் பாதுகாப்புப் படையினருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் அந் தச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## குமார....

கடுமையாகத் தாக்கப்பட்டதுடன், அவர் பயணித்த வாகனமும் கடுமையாக சேதப் படுத்தப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது.

போராட்டக்காரர்களிடம் இருந்து மீட்கப்பட்ட குமார வெல்கம சிகிச்சைக் காக மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்த னர். (ஐ)

## ஆர்ப்பாட்ட...

உறுப்பினரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டார் என்று அறிய வரு கின்றது.

நிட்டம்புவையில் இவர் பயணித்த வாகனம் சென்றுகொண்டிருந்தபோது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அந்த வாகனத்தை வழிமறித்து எதிர்ப்புத் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து வாக னத்துக்குள் இருந்து துப்பாக்கி வேட்டு தீர்க்கப்பட்டதாகவும், இதில் 6பேர் காய மடைந்தனர். இதில் ஒருவர் ஆபத்தான நிலையில் இருக்கிறார் என்றும் தெரி விக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, வாகனத்திலி ருந்து இறங்கி ஓடிய அத்துக்கோரள எம். பி. கட்டடம் ஒன்றில் தஞ்சமடைந்தார். அவர் தஞ்சமடைந்த கட்டடத்தை சூழ ஆயிரக்கணக்கான மக்கள் சூழ்ந்த நிலை யில், அவர் கைத்துப்பாக்கியால் தன் னைத் தானே சுட்டு உயிரிழந்தார் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்தார்.

கொழும்பு காலிமுகத்திடலில் வன்முறைகள் பரவத் தொடங்கியதை அடுத்தே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக் கது.

இதேவேளை அவரின் மெய்ப்பாது காவலரின் உடலும் அந்தப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

# காலிமுகத்திடல் வன்முறை; திருமலையில் கவனவீர்ப்பு!





திருகோணமலை, மே 10

கொழும்பு காலி முகத்திடல் பகுதி யில் நேற்று இடம்பெற்ற வன்முறை சம்ப வத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் வகை யில் திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

நாட்டில் ஊரடங்குச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட் டுள்ள நிலையிலும் நாட்டின் பல பகுதி களிலும் போராட்டங்கள் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

கொழும்பில் இடம்பெற்ற அசம்பா விதத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து திருகோணமலையில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் காரியால யத்திற்கு முன்பாக அதன் ஊளியர்கள் போராட்டம் ஒன்றினை முன்னெ டுத்திருந்தனர்.

அமைதியான முறையில் காலி முகத்திடலில் போராட்டத்தில் ஈடு பட்ட வர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச் சத்தனமான தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரி வித்து குறித்த ஆர்ப்பாட் டமானது முன் னெடுக்கப்பட்டதுடன் நாட்டின் ஜனாதி பதி மற்றும் பிரதமர் இருவரும் பதவி விலக வேண்டும் என் பதை வலியுறுத்தும் வகையிலான பதாதை களை ஏந்தியவாறு குறித்த போராட்டமானது முன்னெடுக் கப் பட்டது. (ஐ)

# அமைச்சர்கள் பதவியிழந்தனர்!

கொழும்பு, மே 10

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியமையைத் தொடர்ந்து அவர் தலைமையிலான அமைச்சரவையும் செயலிழந்தது. இதனால், அமைச்சர்கள் அனைவரும் பதவியிழந்தனர்.

இந்நிலையில், நீதி மற்றும் நிதி அமைச்சர் அலி சப்ரி நேற்று மாலை தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வழங்கினார்.

அத்துடன், சன்ன ஜயசுமண, விதுர விக்ரமநாயக்க ஆகியோரும் தமது விலகல் கடிதங்களை ஜனாதிபதியிடம் வழங்கவுள்ளனர் என்று தெரிவித்தனர். (ஐ)

## பற்றியெரிகிறது...

இல்லங்கள் மற்றும் அவர்களுக்கு சொந்தமான இடங்களை தேடிச் சென்று தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். அத்துடன், அவர்களை தேடியும் வருகின் றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வன்முறைகளில் ஈடுபடுவோர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலியாகினர். 15இற்கும் மேற் பட்டவர்கள் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. நிட்டம்புவையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத் தில் ஒருவர் உயிரிழந்தார். 6 பேர் காய மடைந்தனர்.

இதேபோன்று வீரகெட்டிய பிரதேச சபை தவிசாளரின்வீட்டில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் இருவர் உயிரிழந்த னர். 9 பேர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாடு முழுவதும் நாளை காலை வரை ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்ட போதும் அதனை மீறி போராட்டக் காரர்கள் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட் டது.

இதனிடையே, நேற்றிரவு மீண்டும் அலரி மாளிகைப் பகுதியில் கூடிய போராட்டக்காரர்கள் வன்முறைகளில் ஈடுபட்டனர். அங்குநின்ற வாகனங்கள் எரியூட்டி அழிக்கப்பட்டன. வன்முறை யைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தி போராடியவர்களை கலைத்தனர் என்றும் தெரிய வருகின்றது.

இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரை தென்னிலங்கையில் கலவரங்கள் - பதற்றங்கள் தணியவில்லை. பல்வேறு குழுக்கள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள ஆளும் தரப்பினரை தாக்கி வருகின்றனர். அத்துடன், அவர்களுக்கு சொந்தமான சொத்துக்களையும் அழித்து வருகின்ற னர். இதனால், வன்முறை இழப்புகள் இன்று காலை மேலும் அதிகரித்திருக்கக் கூடிய அச்சநிலை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அமைதி காக்குமாறு கோருகிறார் பிரதமர்



கொழும்பு, மே 10

பொதுமக்கள் அமைதி காக்குமாறு பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காலிமுகத்திடலில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அந்த பதிவில் ”உணர்ச்சிகள் அதிகமாக இயங்கிக் கொண்டிருக்கும் வேளையில், நமது பொது மக்கள் நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மற்றும் வன்முறை வன்முறையைத் தூண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் இருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு பொருளாதார தீர்வு தேவை, அதை தீர்க்க இந்த நிர்வாகம் உறுதி பூண்டுள்ளது” என்று குறிப்பிட்டுள்ளார். (அ)




# வன்முறைச் சம்பவத்துக்கு கண்டனம் கிளிநொச்சி வளாகத்தில் போராட்டம்

கிளிநொச்சி, மே. 10

கொழும்பு காலி முகத்திடலில் இடம்பெற்ற வன்முறை சம்வத்துக்கு கண்டனம் தெரிவித்து யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் மாணவர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று மாலை 5.15 மணியளவில் பல்கலைக்கழக வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் ஏ-9 வீதி வரை முன்னெடுக்கப்பட்டது. (அ)

# அமெரிக்கா கண்டனம்

கொழும்பு, மே 10

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களை அமெரிக்கா வன்மையாக கண்டித்துள்ளது.

இது குறித்து இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது ருவிட்டரில் தெரிவித்துள்ளதாவது:

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களை வன்மையாக கண்டிப்பதுடன் இதுகுறித்து உரியவாறு விசாரணைகளை நடத்துமாறு வலியுறுத்துகின்றோம்- என குறிப்பிட்டுள்ளார். (அ)

# பேர வாவிக்குள் சிக்கிய மஹிந்த ஆதரவாளர்கள்

கொழும்பு, மே 10

பிரதமர் மஹிந்தவுக்கு ஆதரவாக நேற்று கொழும்புக்கு வருகை தந்து காலிமுகத்திடலுக்குள் புகுந்து தாக்குதலை மேற்கொண்டவர்களை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து தாக்குதலை மேற்கொண்டனர்.

மேலும், பல பகுதிகளில் மஹிந்தவின் ஆதரவாளர்கள் பயணித்த பஸ்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

அதன் ஒரு பகுதியாக பிரதமரின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு அவர்களைப் பேர வாவிக்குள் தள்ளிவிட்ட சம்பமொன்று கங்காராம பகுதியில் பதிவாகியுள்ளது. (அ)

# கொழும்பு வன்முறைகளுக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு!

## விக்னேஸ்வரன் எம். பி. கண்டனம்

கொழும்பு, மே 10

கொழும்பில் இடம்பெற்ற வன்முறைக்கு அரசாங்கமே முழு பொறுப்பேற்க வேண்டும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

கொழும்பு காலிமுகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய அப்பாவி மக்கள் மீது குண்டர்களை ஏவி தாக்குதல் நடத்திய சம்பவத்துக்கு அரசாங்கமே முழு பொறுப்பையும் ஏற்கவேண்டும். அரசாங்கத்துக்கு சார்பாக அலரி மாளிகையில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் காலிமுகத்திடலில் கடந்த 30 நாட்களாக போராட்டம் நடத்திய அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தமிழ் மக்கள் மீது கடந்த 65 வருடங்களாக மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட அரச பயங்கரவாதத்தை நினைவுபடுத்துகின்றன.

தமது உரிமைகளுக்கு எதிராக சாத்வீக வழியில் போராட்டம் மேற்கொண்ட தமிழ் மக்கள் மீது படையினரை ஏவி தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் வன்முறையை கட்டவிழ்த்து விட்டிருந்தன. இதுவே பின்னர் ஆயுத போராட்டத்துக்கு தமிழ் மக்களை தள்ளியது. அதேபோல, உணவு, எரிபொருள், மருந்துப்பொருட்கள் ஆகியவற்றுக்கான தமது உரிமைகளை வலியுறுத்தி அமைதியான வழியில் போராட்டம் நடத்தும் அப்பாவி மக்களின் மீது குண்டர்களை ஏவியும் படையினரின் உதவியுடனும் அரசாங்கம் இன்று மேற்கொண்ட வன்முறை மேலும் வன்முறையை தூண்டும் ஒரு செயற்பாடாகவே அமைகின்றது. ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் இந்த சம்பவங்களில் இருந்து தூர விலகி நின்று மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அரசாங்கம் இன்றைய சம்பவத்துக்கு பொறுப்பு ஏற்கவேண்டும். தமிழ் மக்கள் மீது முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நிகழ்த்தி பல்வேறு ஆதாரங்களின் மத்தியிலும் தாம் எந்த ஒரு படுகொலையிலும் ஈடுபடவில்லை என்று அரசாங்கம் இன்றுவரை எவ்வாறு வாதாடுகின்றதோ, அதேபோல, இன்றைய சம்பவத்துக்கும் தமக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று (பல்வேறு காணொலி ஆதாரங்கள் இருக்கின்றபோதிலும்) வாதாடும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

அவசர காலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் போன்றவற்றை திடீரென்று கொண்டு வந்தது இவ்வாறு மக்களை அடித்துத் துன்புறுத்தி இராணுவ அரசாங்கம் ஒன்றை கொண்டு வரவோ என்ற சந்தேகம் எழுகின்றது. தமிழ் மக்களை எவ்வாறு பயங்கரவாதிகள் என்று சித்திரித்து அவர்கள் மீது வன்முறையை ஏவி விட்டார்களோ அதே போல் இனி சிங்கள மக்களுக்கும் எதிராக பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என்று ஏதேனும் ஒரு சொல்லைப் பாவித்து வன்முறை அரசாங்கம் ஒன்றை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று சந்தேகப்படுகின்றேன். ஆகவே தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். இல்லையேல் இவை யாவும் தமிழ்ப் பயங்கரவாதிகளின் சூழ்ச்சி என்று அரசாங்கம் தமிழர்கள் மேல் அல்லது முஸ்லீம்களின் மேல் பாரத்தைப் போட்டு விடுவார்கள் - என்றுள்ளது. (ஐ)

# மதுபான நிலையங்களுக்கு மறுஅறிவித்தல்வரை பூட்டு

கொழும்பு, மே 10

நாட்டிலுள்ள சகல மதுபான விற்பனை நிலையங்களும் மறுஅறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளன.

நேற்றையதினம் கொழும்பு காலிமுகத்திடலில் கலவரம் இடம்பெற்றது. இதைத் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், நாடு முழுவதும் உள்ள சகல மதுபான விற்பனை நிலையங்களையும் மறு அறிவித்தல்வரை மூட வேண்டும் என கலால் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)






# மரண அறிவித்தல்

தோற்றம்
26 - 08 - 1930



உதிர்வு
07 - 05 - 2022

## வல்லிபுரம் நடராஜா

(முன்னாள் கிராம சேவையாளர்)

யாழ். நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நடராஜா அவர்கள் 07-05-2022 சனிக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற வல்லிபுரம், பொன்னம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற இராமநாதர், நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கண்மணி அவர்களின் ஆருயிர்க் கணவரும்,விஜயலட்சுமி, சிவகுமாரன்(சிவா), தயானந்தி(தயா), வரதலட்சுமி(கலா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,காலஞ்சென்ற அருமைநாயகம், பங்கயற்செல்வி, காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (மூர்த்தி) மற்றும் கந்தசாமி(மோகன்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், இராசேந்திரம், பொன்னையா மற்றும் வயிரவநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,சர்மினி, நிலானி, தட்சாயினி, நிலோசன், அனுசன், கீர்த்தனா, சகானா, அதினா, சிந்துஜா, தனுசா, சகன், சிரௌதி, கௌத்ரா, சௌதிரி ஆகியோரின் பாசமிகு பேரனும், ஆதீரன், தீபிக்கா, அக்ஷிகா, அஸ்வின், அர்யுன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

பார்வைக்கு
Saturday, 14 May 2022 6:00 PM - 9:00 PM
Sunday, 15 May 2022 8:00 AM - 8:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Sunday, 15 May 2022 8:30 AM - 10:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Sunday, 15 May 2022 10:30 AM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

Note: நாட்டின் தற்காலிக சூழ்நிலை காரணமாக அன்னாரின் இறுதிநிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவோர் முககவசம் அணிந்து வரவும்.

தகவல்:
சிவகுமார்
(சிவா - மகன்).

தொடர்புகளுக்கு:
**விஜயலட்சுமி (விஜயம்) - மகள்** Mobile : +16472285789
**சிவகுமார்(சிவா) - மகன்** Mobile : +14162779471
**தயானந்தி(தயா) - மகள்** Mobile : +14165565721
**வரதலட்சுமி(கலா) - மகள்** Mobile : +14162202388






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - கறுப்பன், தீரன் அதிகாரம் -01 திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : **BLACK AND WHITE**

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் டிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகேகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

